மாத இதழ்

# மணி ஓசை

Mani Osai
Monthly Magazine

## கலை இலக்கிய சமய சஞ்சிகை

50/=


மணி 03 2014 மாசி ஓசை 12

கண்ணாடி மீன்





கண்ணீர் பயணம்



உள்ளத்தனையது உயர்வு

## யா/வரணி மத்திய கல்லூரியின் வைரவிழா நிகழ்வின் பதிவுகள்









## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நாள் நிகழ்வின் பதிவுகள்









Mani Osai
Monthly Magazine

மாத இதழ்
# மணி ஓசை
கலை இலக்கிய சமய
சஞ்சிகை

## மணி ஓசை கேட்கும் போதெல்லாம் நாம் அத்திசை நோக்கி ஓம் சிவாயநம என உச்சரிப்போம்

மணி ஓசை வாசகர்களை மீண்டும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். மணி ஓசை தனது இரண்டாவது வயதில் காலடி எடுத்து வைத்துள்ள நேரத்தில் தன்னுடைய அழகையும் பொலிவையும் மட்டுமல்லாமல் தரத்தையும் நிலை நிறுத்தியிருப்பதை வாசகர்கள் நன்கறிவீர்கள்!

மணி ஓசை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்தாலும் உலகில் பரந்துள்ள தமிழர்களின் கைகளிலும் தவழ வேண்டும் என்பதே எமது அவா! இலங்கையிலுள்ள வாசகர்கள் மணி ஓசையை தேடி வாங்கிப் பயன் பெறுவதை கண்ணுற்றுள்ளேன். இந்நிகழ்வு மணி ஓசையின் வளர்ச்சியின் அத்திவாரமாகவே கருதுகிறேன்.

இலங்கையில் மட்டுமல்லாது தமிழகத்திலுள்ள தமிழர்களின் கைகளிலும் மணி ஓசைக் குழந்தை தவழ வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எமது ஆசிரியர் குழாம் மேற்கொண்டுள்ளது. புலம் பெயர் தமிழர்களின் உதவிகளையும் எமது குழு நாடி நிற்கின்றது.

தாயகத்திலிருந்து வெளிவருகின்ற மணி ஓசை, ஞானம் மற்றும் மல்லிகை போன்ற சஞ்சிகைகளை அவர்கள் வரப்பிரசாதமாகக் கருதவேண்டும். அவ்வாறான இலக்கியச் சஞ்சிகைகளுக்கு அவர்கள் ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் வேண்டும்.

தொழில்நுட்ப வளர்ச்சிப் போக்கின் காரணமாக எமது சமூகத்திடையே வாசிப்பு அருகிவருகின்றது. குறிப்பாக இளந்தலைமுறையினர் வாசிப்பின் வீச்சை அதிகரிக்க வேண்டும். இந்த அதிகரிப்பு அவர்களை வெற்றியின் உச்சநிலைக்கு இட்டுச் செல்லும்.

**சிரித்திருப்போம் இன்பமாக வாழ்வோம்.**

அஜய் விமலநாதன்
பதிப்பாசிரியர்

## கல்விப் பயிரை நீரூற்றி வளர்ப்போம்!

கல்விப் பயிர் வளர்ந்து தன்னுயிர்க்கு மட்டுமன்றி மண்ணுயிர்க்கும் நன்மை கொடுக்கும் என்ற காரணத்தினால் வள்ளுவர் 'கல்வி' என்ற அதிகாரத்தை வைத்துள்ளார்.

அதுவும் அரசியலினுள் அதனை காரணம் நோக்கி வைத்துள்ளார். அதில் வள்ளுவர் கல்வியின் சிறப்பை பொதுப்படவே கூறினாலும், அரசியலினுள் வைத்தமைக்கான காரணம் சற்று சிந்திக்கத்தக்கது.

அரசன் கற்றற்குரிய நூல்களாக அறநூலும், நீதிநூலும், யானை–குதிரை–தேர்படைக்கலம் போன்றவற்றின் நூல்களையும் குறிப்பிடுகின்றார் வள்ளுவர்!. அரசன் கல்வியாளனாகவும் அறத்தைக் கடைப்பிடிப்பவனாகவும், வீரனாகவும் திகழ்ந்தால், நாட்டு மக்களும் அவ்வாறே ஒழுகுவர் என அவர் கருதியிருக்கவேண்டும். அந்த வகையில், கல்வியின் சிறப்பை சொல்லவந்த வள்ளுவர்,

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு"

என்கிறார் பாருங்கள்.

மணலின் கண் கேணி தோண்டிய அளவிற்கு ஊறும். அதுபோல மக்கட்கு அறிவு கற்ற அளவிற்கு ஊறும் என்கிறார். கற்பதை இடை நடுவில் விட்டுவிடாமல் தொடரவேண்டும் என்பதற்காகவே வள்ளுவர் இந்தக் குறளை வைத்தாரோ என எண்ணத் தோன்றுகின்றது. பாடசாலைக் கல்வியை இடைநடுவில் விட்டு வெளிநாடு செல்கின்ற இளைஞர் யுவதிகளுக்கு இந்தக் குறள் அறிவுரையாக அமைகின்றது.

வள்ளுவர் கல்வி என்ற அதிகாரத்தின் பின் கல்லாமை என்ற அதிகாரத்தை வைத்துள்ளமை கல்வியின் பயனுக்கு வலுச் சேர்ப்பதாக அமைகின்றது. அந்த அதிகாரத்தில்,

"கல்லாதான் ஒட்பம் கழிய நன்று ஆயினும்
கொள்ளார் அறிவுடை யார்"

என்கிறார்.

கல்லாதவன் அறிவுடைமை உள்ளவனாக இருந்தாலும், நிலைபெற்ற நூலறிவை உடையவர்கள் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்கிறார்.

அதாவது கேள்வி ஞானத்தால் பெறுகின்ற அறிவை விட நூலறிவினால் கிடைக்கின்ற அறிவு சிறந்தது என்பதை உணர்த்துகின்றார் போலும்.

எனவே, கல்வியின் சிறப்பை நன்கறிந்து எமது இளஞ் சமுதாயம் வளமுள்ள கல்வியைப் பெற்றுய்ய வேண்டும்!

அன்புடன்,
பிரதம ஆசிரியர்
க. ரஜனிகாந்தன்

# வான் மழைத் தோழன் வந்தான்

நெற்பயிர் செழித்து ஓங்கி நேர்மையாய் விளைச்சல் ஈய
நற்துணை செய்ய வல்ல நல்ல நீர் மண்ணில் இல்லை
பொற்பொடு போகம் பார்த்து பெய்யும் நல்மழை நீர் என்ற
கற்பிதம் இருந்ததாலே கழனியில் நெல்லைத் தூவி

நல்குரவுற்ற ஏழை, செல்வர்கள் வீட்டின் முன்னே
நலிவுறக் கையை ஏந்தி நாதியற்றிரத்தல் போலே,
பிள்ளைகள் தயவுக்காக பேதுறும் பெற்றோர் போலே,
வெள்ளமாய் மழையை நாடி வேண்டிய மட்டும் காத்தார்.

வான் மழைத் தோழன் வந்தான் வாடிய பயிர்க்கு எல்லாம்
தேன் எனத் திசைகள் தோறும் நீரினை ஊற்றிச் சென்றான்
ஏன் எமை இதுநாள் காறும் ஏய்த்தனை ? என்று கேட்டேன்,
மானிடம் உம்மில் இல்லை மாண்புறு குணங்கள் இல்லை

தானமும் தவமும் இல்லை தாங்கரும் பொறுமை இல்லை
அடுத்தவர் துன்பங் கண்டு அழுதிடக் கண்களில்லை
எடுத்தது முடிக்க வேண்டும் என்பதே உங்கள் எண்ணம்
இயற்கையை மதிப்பதில்லை இரக்கமென்றொன்று இல்லை

வயதிலே மூத்தோர் சொல்லும் வார்த்தைக்கு மதிப்பு இல்லை
தயவெலாம் எங்கோ போச்சு தன்னலம் மூச்சாய் ஆச்சு
கற்பொடு பொற்பாம் காதல் காமுறும் மேன்மைத் தர்மம்
நற்பொருள் நல்ல சேவை நாடெலாம் செழிக்கக் கண்டால்


முற்றிலும் மண்ணில் பெய்து முழுமைகொள் விளைச்சல் ஈந்து
பொற்பொடு நானும் வாழுவேன் போய்விடை கொண்டேன் வாழி
என்றது எழிலாய்ச் சொல்லி என்னை விட்டகன்று போச்சு
நன்றதை நானும் எண்ணி நெஞ்சிடை அமைதி கொண்டேன்.

வான்மழைத் தோழன் சொன்ன வார்த்தையைக் கேட்டு நாளும்
மேன்மை கொள் வாழ்வு பேணி மண்ணிடை வாழ்வோமாயின்
நல்வளம் நாளும் ஓங்கும் நலமுற நாமும் வாழ்வோம்
தொல்லைகள் தூரப் போகும் துயரற்று வாழ்வோம் நாமே!

- கம்பநேசன் -

# மனிதர்களை விழுங்கும் மர்மத்தீவு

தொகுப்பு:-ஹரி



கண்ணுக்கு எட்டிய தூரம் வரை கடல் போல பரந்து விரிந்த ஏரி. ஆங்காங்கே மலைகள். பசுமையாக குட்டி குட்டியாக தீவுகள். சுற்றுலாப் பயணிகளை கவரும் சுவாரஸ்யம் ஏராளம் என்றாலும், அங்கு போகும் மனிதர்கள் திடீரென மாயமாகி விடுகிறார்கள். இந்த மர்ம தீவு பற்றிய விடயங்கள் திகிலூட்டுகின்றன. உலகிலேயே மிகப் பெரிய பாலைவனக் கடல் என்று பெயர் பெற்ற "துர்கானா ஏரி" கென்யாவில் உள்ளது. ருடால்ப் ஏரி என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்ட இந்த ஏரிக்கு, பல்வேறு நதிகளில் இருந்து நீர் வருகிறது. இங்கு நிலவும் கடும் வெப்பத்தால், ஒரு பகுதி ஆவியாகிறது.

மீதமுள்ள நீர், அதிக உப்புத் தன்மையுடன் காணப்படுகிறது. கென்யாவுக்கு வரும் சுற்றுலா பயணிகளை மிகவும் கவர்ந்த இடங்களில் ஒன்றாக இந்த பாலைவனக் கடல் திகழ்கிறது.

குட்டி குட்டி தீவுகளும், பழமை மாறாத பழங்குடியின மக்களின் வாழ்க்கை முறையும் கவர்ந்திழுக்கிறது. இந்த கவர்ச்சியோடு நம்மை உறைய வைக்கும் அதிர்ச்சிகளும் உள்ளன.

இங்குள்ள குட்டி தீவுகளில் ஒன்று "என்வைட்டினெட்." இங்கு வாழும் பழங்குடியின மக்கள் பேசும் மொழி சொல். இதன் அர்த்தம் "திரும்ப வராது" என்பதாகும். என்வைட்டினெட் தீவுக்குள் செல்பவர்கள் யாரும் திரும்பி வருவது கிடையாதாம். அறிவியல் ஆராய்ச்சிகளுக்கே சவால் விடும் வகையில் இந்த தீவு உள்ளது.

முன்னொரு காலத்தில் இதில் மனிதர்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தனர் என்றும் மீன் பிடிப்பது, வேட்டையாடுவது அவர்களின் தொழிலாக இருந்தது என்றும் அயல் தீவுகளை சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள்.

வியாபாரத்துக்காக அயல் தீவுகளுக்கு வருவார்களாம். ஆனால் ஒரு காலத்துக்குப் பிறகு தீவில் இருந்து வெளியே வரும் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக குறைய தொடங்கியுள்ளனர்.

ஒரு கட்டத்தில் யாரும் வராமல் போனதால் அயல் தீவுகளில் இருந்தவர்கள் சந்தேகமடைந்து அந்த தீவுக்கு சென்றுள்ளனர்.

ஆனால் அப்படி சென்றவர்களும் திரும்பாமல் போகவே மர்ம தீவாக மாறியது என்வைட்டினெட்.

கடந்த 1935ம் ஆண்டு ஆங்கிலேய விஞ்ஞானி விவியன் பஸ் என்பவர் தன் குழுவினரோடு இந்த தீவு பற்றி ஆய்வுகள் மேற்கொண்டார்.

என்வைட்டினெட் குட்டித் தீவுக்கு இளம் விஞ்ஞானிகள் மார்டின் ஷெப்லிஸ், பில் டேசன் ஆகியோரை அனுப்பி வைத்தார் விவியன். நாட்கள்தான் போனதே தவிர விஞ்ஞானிகள் திரும்பியபாடில்லை. இதனால் அதிர்ச்சியடைந்த ஆராய்ச்சியாளர்கள் தூரத்தில் இருந்தே ஆய்வுகளை செய்தனர். ஹெலிகாப்டரில் பறந்தபடியே வேவு பார்த்தனர்.

எந்த தடயமும் கிடைக்கவில்லை. பழங்குடியினர் குடிசைகள் அப்படியே இருந்தன. அழுகிய மீன்கள் சிதறிக் கிடந்தன. மனித நடமாட்டம் மட்டும் இல்லவே இல்லை.

இதையடுத்து அயல் தீவுகளில் வசித்தவர்களிடம் தகவல்கள் சேகரித்தார். "அந்த தீவில் பிரமாண்ட ஒளி ஒன்று வரும். அப்போது அந்த இடத்தில் யார் இருந்தாலும் காணாமல் போய் விடுவார்கள். அப்படித்தான் அங்கிருந்தவர்கள் காணாமல் போயிருப்பார்கள்" என்று பக்கத்து தீவுவாசிகள் கூறினர்.

பிரமாண்ட ஒளி வெள்ளம் எப்படி வருகிறது, அது மனிதர்களை எரித்து விடுகிறதா, அப்படி என்றால் எலும்புகளாவது மிஞ்சி இருக்க வேண்டுமே என்ற கேள்விகளுக்கு விவியனுக்கு விடை கிடைக்கவில்லை.

இந்த தீவுக்கும், வேற்றுக் கிரகவாசிகளுக்கும் தொடர்பு உண்டா என்ற கோணத்திலும் ஆராய்ச்சிகள் சூடு பிடித்துள்ளது.

இங்குள்ள மக்களை வேற்று கிரகவாசிகள் கடத்தி செல்கின்றனர் என்றும், கண்ணுக்குத் தெரியாத சக்கரம் ஒன்று சுழல்கிறது என்றும், மக்கள் காற்றில் கரைகின்றனர் என்றும் கூறப்படுகிறது. ஆனால் மர்ம முடிச்சுகள் எதுவும் இன்னும் அவிழவில்லை

# நம்பியவர்க்கு அருளளிக்கும் புளியம்பொக்கணை நாகதம்பிரான்



நாற்றிசையும் பெரும் சமுத்திரத்தால் சூழப்பட்டு இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படுகின்ற இலங்கை என்ற ஈழநாட்டின் வடபாலமைந்த மணல் திடலான யாழ்ப்பாணம் என்பது ஒரு பெரும் பிரிவாகவும் இதனுள் பதின்மூன்று உட்பிரிவுகளும் வகுக்கப்பட்டிருந்தன. இந்த பதின்மூன்று உட்பிரிவுகளில் கரைச்சிப் பிரிவானது இயற்கையின் பல வளங்களையும் ஒருங்கே பார்ப்போர் மகிழும் வண்ணம் சிறந்து காணப்பட்டது. இதனால் இந்தக் கரைச்சி பிரிவு மற்றைய பிரிவுகள் யாவற்றிலும் மேலாகத் திகழ்ந்தது.

கரைச்சிப் பகுதியில் வடக்குப் பக்கமாகச் சமுத்திரம் போன்ற ஆழமுடைய கழிக்கடலும் மற்றைய மூன்று திசைகளிலும் பெரிய குளங்களும் பாய்ந்து ஓடுகின்ற பெருத்த ஆறுகளும் எல்லைகளாக அமைந்துள்ளன. இன்னும் பாலை, நாவல், வேம்பு, புளி, முதிரை, பனிச்சை, ஆல், அத்தி, கருங்காலி, தேக்கு, இலுப்பை முதலிய பெருமரங்களும் அழகிய மலர்களையுடைய குருந்து, செழுமலருடைய கொன்றை போன்ற மரங்களும் நாலாதிக்குகளிலும் அடர்ந்து வளர்ந்து மதிலைப் போன்று காட்சி தருகின்றன. நன் மரங்கள் நிற்கின்ற நாடே நன்நாடு என்று ஆன்றோர் கூறுவதால் ஈடிணையற்ற மகோன்னதமான இடமென்று கூறப்படுகின்றது இந்தக் கரைச்சிப் பகுதி.

சொல்லப்பட்ட சகல வளங்களும் நிறைந்து சிறந்த கரைச்சியின் உட்பிரிவுகள் பதினெட்டில் முதன்மையாகத் திகழ்வது புளியம்பொக்கணை என்ற ஊர். இந்தப் புளியம்பொக்கணை ஊரிலே அரிய கல்விமான்களும், நெற்காணிகள் தொகையாக உடைய நிலச் செல்வந்தர்களும், இராசாக்களைப் போன்று சகல ஐஸ்வரியங்களும் பெற்று இல்லங்களில் வாழ்வார்கள்.

இப்படிச் சிறப்புக் கொண்ட ஊரில் நான் முகத்தினையுடைய பிரம்மதேவர், அரியவராகிய சிவபெருமான் அருளினால் பாம்பு வடிவமாய் பெண் வயிற்றில் அவதரித்து தெய்வீகமாக மாறி, இந்த ஊரிலே ஒரு தேவாலயம் உண்டாகும் அதைப் பார்ப்பேனென்று கூறியவர், அதன் காரணம் தீமைகளை நீக்கி மிகவும் பரிசுத்தமாய் இருந்தது அந்தப் புளியம்பொக்கணை ஊர்.

இவ்வளங்களில் சிறந்த புளியம்பொக்கணை என்ற நல்லூரோடு ஒன்றிணைந்த "கொழுந்துப்புலவு" என்ற சிற்றூரில் பிரிவில்லாது வாழ்கின்ற வன்னிய வேளாளர்களின் முதல்வராகி முதலியார் பட்டம் பெற்றவராகி, பேரறிவினையுடையவராகி "நீதிநாயக முதலியாரென்ற" பெயரைப் பெற்று வேளாளர்களுக்குரிய முதன்மைச் சிறப்பான ஏர்ச்சீரோடு நீதிநாயக முதலியார் வாழ்ந்தார்.

இப்படியான, உயர்ந்த நிலைமை பெற்று வாழ்கின்ற சிறப்பைக் கண்ட அவர்களது சுற்றத்தவர்கள், இவருக்குச் சமமாகிய வன்னிய மரபிலே உள்ளவருமாகிய "கமலம்" என்னும் பெயருடைய கன்னிகையை அக்கினி சாட்சியாக வைத்து விவாகம் செய்து வைத்தனர்.

"நீதிநாயக முதலியார்" தன் செல்வத்தாலும் பிதாமாதா கொடுத்த முதுசொத்தாலும் மனைவியின் சீதனப் பொருட்களாலும் இன்னும் பலவித வருவாய்களினாலும் அரசனைப்

போலச் செல்வத்தை அனுபவித்து வந்தாரெனினும், "புத்திரப்பேறு" இல்லாமையால் பெருங் கவலையடைந்தார். பின்பு, எமக்கோர் புத்திரன் பிறக்க வழிசொல்லு எனக் கற்புடைய மனைவியான, "கமலம்" அம்மையாரிடம் வேண்டிநின்றார்.

"கமலம்" அம்மையார், எமது இந்தச் சிறிய துன்பம் நீங்க வேண்டுமெனில், சிவபெருமான், உமையாரினது பாதங்களில் மலர்கள் தூவி, வணங்கி நல்ல விரதங்களை முறைதவறாது அனுஷ்டித்தால், புத்திர பாக்கியம் கிடைக்கும் என எண்ணினார்.

சிவனுடைய திருவருளினாலும் தான தருமங்கள் செய்து வந்த பலனாலும், ஒருவித துன்பமுமில்லாமல் கமலம் அம்மையார் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். சொல்லப்படுகின்ற தங்கள் குலப்பெருமை விளங்கும்படியாக, "மாப்பாண முதலியார்" என்ற பெயரை புதல்வனுக்குச் சூட்டி நல்லன்போடு வளர்த்துவந்தார். பெருந்துயர் மனதினீங்கி, இன்பமெய்தி நிலைபெற்ற புதல்வனோடு வாழ்கின்ற நாட்களில் அம்மையார் மீண்டும் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்து "வவுனிய முதலியார்" என்ற சந்ததிப் பெயரைச் சூட்டி, தங்கள் இரு கண்கள் போல இரு புதல்வரையும் காத்து சிவனின் திருவருளைப் பெற்று வளர்த்தார்கள்.

இரண்டு ஆண்பிள்ளைகளை பெற்றும் பெண் பிள்ளை இல்லையே என்ற துன்பம் நீங்கும் பொருட்டு, சிவனுடைய திருவருளால், பங்குனி மாதத்தில் வருகின்ற உத்தர நட்சத்திரமும் பூரணையும் கூடிய நல்ல "சுபதினத்தில" ஒரு பாம்பையும், ஒரு பெண் குழந்தையும் இரட்டையாகப் பிரசவித்தார் அம்மையார். தேவர்களும் வியந்து வாழ்த்துவதாகிய பாம்புக் குழந்தை பிறந்ததன் பின்னர், பெற்றோருக்கு முன்பிருந்த செல்வத்திலும் பத்து மடங்காக செல்வம் அதிகரித்துப் பெருகியது. மனவிருப்பத்தோடு வாழ்ந்து வருகின்ற பாம்புருவான குழந்தைக்கு சற்றேனும் மனத்தளர்ச்சி இல்லாமல், "தம்பிரான்" எனவும், கூடப்பிறந்த சகோதரியான அழகு மிகுந்த பெண் குழந்தைக்கு "வள்ளி நாச்சன்" என்ற பெயரும் சூட்டினர்.

எல்லோரும் பார்த்து அதிசயிக்கும்படி, "தம்பிரான்" என்ற பாம்பானது, செய்கின்ற விளையாட்டை ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் கேள்வியுற்று, தங்கள் மனதிற்குப்பட்டவாறு சொன்னார்கள். எல்லோரும் தங்கள் அறிவிற்கேற்றவாறும் மனதில் தோன்றுவதையும் சொல்லிச் செல்கையில், மூத்தவர்களான மாப்பாண முதலியாரும், வவுனிய முதலியாரும் வளர்ந்து வாலிபர்களானார்கள். தம்பிரான் என்ற பாம்புடன் கூடிப்பிறந்த வள்ளிநாச்சனும் மங்கைப் பருவத்தையடைந்தனள்.

தங்கள் நிலைமைக்குத் தகுந்தபடி பிள்ளைகளைத் திருமணம் செய்து வைத்து, எவராலும் தப்பமுடியாத வயதில் மூப்படைந்து உடலும் மெலிந்திருந்தார் நீதிநாயக முதலியார். பின்பு மக்கள் மூவரும் தனித்தனியாய் இல்லறம் நடத்திப் பிள்ளைகளும் பெற்று வாழ்ந்து வந்த அதே வேளை பாம்புக்குழந்தை தாய் தந்தையருடனிருந்தது.

முப்பங்கையும் சிரிப்பக்கினியாலே எரித்தருளிய முக்கண்ணரும் தேவநாயகருமாகிய சிவனின் கிருபையாலே பாம்பு மணஞ்செய்து அரிய பிள்ளைகளைப் பெற்றதென்று சொல்லும்படி மரம் நிறைந்திருந்த காடுகளிலிருந்த மண்ணுணி, வழலை இவைகளெல்லாம் இந்த நல்ல பாம்போடு சேர்ந்து வீட்டிலே வசதியான இடமெங்கும் மனையின் வெளிப்புறங்களிலும் பெட்டி, சட்டிகளிலும் நிறைந்து சொந்த வீடு போல இருந்தன.

மேன்மையாகிய வன்னி மரபினிலுதித்த நீதிநாயக முதலியாரும் சுற்றத்தவர்களும் நெருங்கிய பல வளமும் பெருகிச் சிறந்து விளங்க வாழ்ந்தார்கள். பாம்பும் தெய்வமும் இரவில் தங்குவதற்கு ஏற்ற இடமான அரசமரப் பொந்திலே தங்கியதாம்.

நாகதம்பிரான் திருக்கோயிலை ஸ்தாபிதம் செய்து வணங்கிய அந்நாள் தொடக்கம் கரைச்சிப் பகுதியில் விஷம் பொருந்திய உயிரினங்களாலும் சொல்லப்படுகின்ற பெரிய காட்டு மிருகங்களினாலும் உண்டாகும் தீமை, பகைவர்களின் கெடுதல்கள், பெல்லி சூனியம் போன்றவைகளால் வரும் கர்மநோய்கள் அனைத்தும் பரம்பொருளாகிய சிவபிரான் திருவருளால் தீரப்பெற்று அவரது அடியவர்கள் ஒரு துன்பமுமின்றி இன்பத்துடன் வாழ்ந்து வந்தார்கள்.

சொல்லப்பட்ட பூசை முறைமையில் தவறில்லாமல் முறைப்படி சிலகாலம் பூசைசெய்து





வந்த பூசகரான நீதிநாயக முதலியார் சிவபதமடைந்தார். பின்பு பூசகரின் இளைய மகனான "வவுனிய முதலியார்" பூசகராகி, ஆலயத்தையும் திருத்திப் புதிதாகக் கட்டுவித்து எம்பெருமானுக்குரிய பூசை, பொங்கல் என்பவற்றை முறை தவறாது சிறந்த முறையில் செய்து வந்தார்.

இதன்படி விதிமுறைக்கேற்ப, செய்கின்ற பொங்கல் விழாவுக்கு எட்டு நாளைக்கு முன்பு விளக்குவைப்பு என்கின்ற நிகழ்வுடன் நாக தம்பிரானுக்கு விசேட அபிசேகப் பூசை செய்து வழிபடுவர். அதனைத் தொடர்ந்து "பிரம்பு" கொடுக்கின்ற சிறப்பு நிகழ்வு இடம்பெறும். இறைவன் திருவுருவை நினைவுபடுத்தும் வகையில் வெள்ளி கட்டிப் புனிதப்படுத்தப்பட்ட பிரம்பு ஒன்றும் நாக படமும் விபூதி பேளை அடங்கலான பெட்டியும் பிரதம பூசகரிடமிருந்து பெற்றுக்கொண்ட பூசகர்களுடன் கோயிலில் தொண்டு செய்கின்ற அடியவர்களும் பின்தொடர, முரசு, பறை போன்ற வாத்தியங்கள் ஒலித்துக்கொண்டு முன்னே செல்லும். இவ்வாறு சென்று ஊர்கள் தோறும் அடியவர்களின் காணிக்கை பெறுவதும் வழக்கமாகும்.

இக்காலம் ஒல்லாந்த நாட்டவர் இலங்கை நாட்டை முழுமையாக அரசாட்சி செய்த காலம் அப்போது அவர்களின் மன எண்ணப்படி நடந்து அவர்களுக்கு கீழ்ப்படிந்து பணிவிடை செய்கின்ற சிலபேருடன் சேர்ந்து, குதிரைகளின் மீது ஏறி நாட்டு வழக்கங்களை சுற்றிப் பார்த்துக் கொண்டு மடுக்கரைப் பக்கமாக வந்தார்கள்.

பூசகரும் அடியவர்களும் செய்யும் திருத்தொண்டுகளைப் பார்த்து அதிசயித்தனர். யார் அனுமதி தந்தார்கள்? என்று அச்சுறுத்தினார்கள். பூசகர் எம்பெருமானை வேண்டினார். இந்த வேளையில், பூசகரும் வியப்புற்று அதிக சந்தோசம் கொள்ள ஒல்லாந்த அதிகாரிகளின் முன், ஐந்து தலை நாகபாம்பாக வெளியே தோன்றித் தனது அகன்ற படத்தை விரித்தாடியது.

இப்படியான நிலையிலே அங்கு வந்த அதிகாரிகள் ஆலய வாசலில் நின்ற வண்ணம் பூசகரை வரவழைத்தனர். வரவழைத்து பண்டமரவடியாகிய மடுக்கரை என்ற இடத்தில் தாம் கண்ட ஐந்து தலைப் பாம்பினுடைய உருவத்தையும் வெள்ளியால் செய்யப்பட்ட படத்தையும் கொடுத்து அந்தப் புராதன ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டுவதற்கேற்ப, மூலதனமாகப் பணமும் கொடுத்து விடைபெற்றுச் சென்றார்கள். அன்றுதொட்டு, அந்த வெள்ளி நாகபடத்தையும் வைத்து பூசை செய்து வருகின்றார்கள். எக்காலமும் தவறு ஏற்படாவண்ணம் எண்ணுதற்கரிய பூசை, பொங்கல் விழா என்பவற்றை நீதிநாயக முதலியாரின் சந்ததியில் வந்தவர்கள், ஒருவர் பின் ஒருவராக முறைப்படி பூசகர்களாகி பெருவிருட்சமாகி நிற்கும் அரசம்பொந்தில் உறைகின்ற, பாம்புத் தெய்வமாகிய நாகதம்பிரானுக்கு வேண்டும் நிவேதனமாக பாலும் பழமும் பக்தியோடு வைத்து இன்றுவரை தவறின்றி பூசித்து, நாக தம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்கும் வண்ணம் திருதொண்டாற்றி வருகின்றார்கள்.

இந்நிலையில் ஆலயம் புனருத்தாரனம் செய்யப்பட்டு 10.02.2014 இல் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

*நன்றி – ஆலய பரிபாலனசபை*




# கால ஓட்டத்தில் எல்லாம் கழுவுண்டு போகும்

"நாடு போகிற போக்கில நரி உழுந்து வடை கேட்குதாம்"

"என்ன நல்லதம்பியண்ணை! ஆரைப் பேசிறியள்! எனக்குத்தான் சொல்லுறியளோ! நான் அப்படி உங்களிட்டை என்ன கேட்டனான்"

"வா முருகேசா வா.. உன்னை ஏன் நான் திட்டப் போறன். உன்னை உன்ர கொப்பர் சுப்புறத்தான் அப்படி வளக்கேல்லை. அவன் உன்னை எப்படி வளர்த்த வன் என்று எனக்கு நல்லாத் தெரியும்"

"பின்ன ஆரைத்திட்டுறியள்!

"உவன் தான் என்ர கடைசி மோளின்ர கடைக் குட்டி ரமேசைத்தான் திட்டுறன்."

"அவன் என்ன பிழை செய்தவன். அவன் நல்ல பிள்ளை தானே! அவனைப்போல நல்லபிள்ளை உங்களுக்கு பேரனாய் கிடைத்ததற்கு நீங்கள் தான் கொடுத்து வைக்கவேண்டும்."

"அது சரி கணேசா! நான் அவன்ர கரைக்டரைப் பற்றி குறை சொல்லேல்லை. ஒழுங்கா நல்ல சாப் பாடு சாப்பிட மாட்டன் என்கிறான். அதுதான் பேசின் னான்."

"என்ன நல்லதம்பியண்ணை! அவன் வளர்ர பிள்ளை விரும்பியதை தின்னட்டும் விடுங்கோவன்."

"என்னத்தை விடச்சொல்கிறாய். ஒழுங்கா சாப்பிட்டு உடம்பை தேற்றிற நேரத்திலே தேற்றாமல் எப்ப தேற்றப்போறானாம்! காலையிலே கொத்துரொட்டி, இரவிலே பிரைட்ரைஸ். இதுதான் அவன்ர தினசரி சாப்பாடு. இதை யாரிட்டை சொல்லி அழுறது. உனக்குத் தெரியுமோ? எனக்கு பதினாறு சகோதரங்கள். எட்டாவது நான். எங்கடை ஐயாவும் அம்மாவும் எங்களை எப்படி வளர்த்தவை தெரியுமோ?

தோட்டம் இறைப்புநாள் என்றால் ஐயா எங்களை நாலு மணிக்கு எழுப்பிப் போடுவார். அண்ணையவை மூன்று பேரும் நானும் தம்பியும் ஐயா வோடை சேர்ந்து பட்டையாலே தண்ணி அள்ளி பயிர்க ளுக்கு இறைக்கத் தொடங்கினம் எண்டால் ஏழு மணி க்குள்ளே இறைத்து முடித்து விடுவோம். அதற்குப் பிறகு வீட்டைவந்து குளித்து விட்டு அம்மா தருகிற ஒடி யல் புட்டையும் சின்னவெங்காயம், பச்சை மிளகாய் அரித்துபோட்டு நல்லாக் கலக்கிய புழுங்கஞ்சியையும் குடித்துவிட்டு பள்ளிக்கூடம் போனம் எண்டால் மத்தி யானம் வீடு வரும் வரைக்கும் நிண்டு பிடிக்கும். உடம்பு க்கும் சத்துத்தான்.

மத்தியானம் வீட்டை வந்தால் சோறும் இரண்டு மூண்டு மரக்கறியோட ஒடியல் புட்டும் தயிரும் தருவா அம்மா. அதையும் சுவைத்துச் சாப்பிட்டுவிட்டு, மாடுகளுக்கு தண்ணி வைக்கத் தோட்டத்துக்குப் போய்விடுவம். எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்தால்.......

சொல்லவே வாய் ஊறுது. அம்மா பொருத்து வான் புட்டு நல்லெண்ணையோடு தருவா! சாப்பிட டால் அப்பிடியொரு பலம்.

ஆனால் இன்டைக்கு எங்கடை பேரன், பேத்தி கள் தின்னிற சாப்பாட்டைப் பார்த்தால் நான் இருக்கிற வயசு வரைக்கும் உதுகள் இருக்குங்களோ எண்டு நினைக்க பயமாய் இருக்கு கணேசா, அதுதான் உப்பிடித் திட்டினனான்.

நாங்கள் இருந்ததுபோல திடகாத்திரமா என் சந்ததிகளும் இருக்க வேணும் எண்டு நினைக்கிற திலே என்ன தம்பி இருக்கிறது!"

"அதிலே தப்பு இல்லை நல்லதம்பியண்ணை! நாங்கள் வளர்ந்த காலம் அப்படி. இதுகள் காலம் இப்படி. உழைப்பின் அருமை தெரியாமல் வளருதுகள். அதுகளை அதுகள் பாட்டிற்கு விட்டிடுங்கோ!"

"விட்டிடலாம், விட்டுவிட்டால் எதிர்கால சந்ததி என்னாகுமோ? எல்லாம் அவன் செயல்! கடவுளே!"

# சிறுகதை

# கண்ணீர் பயணம்

**பிரயதன்**

மனதின் கறைகளை உணர்ச்சி அலைகள் அடித்துக் காயப்படுத்திக் கொண்டிருந்த நேரம், தன் மனதிலுள்ள கறைகளை ஈரப்படுத்திக் கொண்டிருந்தாள் துர்க்கா. "அண்ணா! உலகத்தில் பிறந்த எல்லோருமே ஏதோ ஒரு வகையில் சந்தோசமாய் இருக்க என் வாழ்க்கையும், உங்கட வாழ்க்கையும் மட்டும் ஏன் இருட்டிலயே இருக்குது? ஒரே வயித்தில் பிறந்தாதான் அண்ணன்–தங்கச்சியா? அம்மா, அப்பா இருந்தும் அநாதரவா இருக்கிற எனக்கு சொந்தமெண்டு சொல்லுறதுக்கு இருக்கிறது நீங்களும் கண்ணனும் தான். கண்ணன் சந்தோஷமாக இருக்கிறான். நீங்கள் மட்டும் சந்தோசத்தையே இழந்திட்டீங்கள். உங்கள இந்தக் கோலத்தில பார்க்கிற சக்தி எனக்கு இல்லை. உயிருக்குயிரா இருந்த காதலே கடைசியில உங்கட உயிர எடுக்கிற எமனா போடும் போல இருக்கே. இண்டையோட 20 நாள். நீங்கள் என்னோட கதைக்கேல்ல. எவ்வளவோ சந்தர்ப்பத்தில தனிமையை உணர்ந்திருக்கிறன். கடவுளே.. நீ இருக்கிறது உண்மையெண்டா எல்லா கஷ்டத்தையும் எனக்கு தந்திடு. அண்ணனை சந்தோசமாக வாழவிடு. அது நடவாது எண்டா இப்பவே எனக்கு சாவைத் தா. முழு மனசா ஏற்கிறன்" என்று பாயில் புரண்டு புரண்டு அழுதாள் துர்க்கா.

சரியாக இரவு 9 மணி. நான்கு சுவருக்குள் மட்டும் கேவிக்கேவி அழுவதனால் அவளுடைய சோகம் மாறிப்போகுமா என்ன? கண்ணீர்த்துளிகள் அவளைச் சுற்றி இருக்கும் கயிறுகளாகிவிட்டன. ஒருவாறு கையிலிருந்த ஆஞ்சநேயரை மார்பில் அணைத்தவாறு கண்களை மூடும் போது நேரம் அதிகாலை ஒன்று நாற்பது.

நான்கு மணி நேரத்தின் பின்னர் பறவைகளின் ஒலி காதுகளை இனிமை ஆக்கிக் கொண்டிருந்தன. அதை ரசிக்கிற நிலைமையில் அவள் இருப்பதாகத் தோன்றவில்லை. பாயிலிருந்தபடியே "என்ர அண்ணாவுக்கும், கண்ணனுக்கும் எந்த குறையும் வரக்கூடாது" என வேண்டும்போது, அதை ஏற்றுக்கொள்வதைப்போன்று அருகேயிருந்த ஆலய மணி ஒலித்தது. தன்னுடைய கடமைகளைச் செய்த பின் 8 மணியளவில் பஸ் ஏறி ரியூசனுக்கு சென்றாள். அங்கு குமார் சேரின் தமிழ்ப் பாடத்தில் மெய் மறந்திருந்தாள். 'பிள்ளையள் நாங்கள் இண்டைக்கு கணேசலிங்கம் எழுதின 'நீண்ட பயணம்' எண்ட நாவலைப்பற்றி படிக்கப் போறம். இது ஒரு அற்புதமான நாவல். யாழ்ப்பாணத்து மக்களிடத்தில் இருக்கிற சமூக அமைப்பை வைத்துத் தான் இந்த நாவல் எழுதப்பட்டது" என விளக்கிக்கொண்டிருக்கும் போது துர்க்காவினுடைய மனதில் அந்த நாவல் நிழலாடியது. எவ்வளவு அழகான நாவல். தாழ்ந்த சாதி மக்களுடைய ஆசைகள், உணர்வுகள், சந்தோஷங்கள் யாவும் அடக்கப்படுகின்றன. உரிமைகள் பறிக்கப் படுகின்றன. ஒரு நிமிடம் செல்லத்துரையான் என்ற கதாபாத்திரம் கண்முன்னே வந்து போனது அவளுக்கு. ஒன்பது மணியளவில் வகுப்பு முடிய அருகேயிருந்த அம்பாள் கோயிலிற்கு ஆறுதலை தேடிச் சென்றாள்.

கிணற்றில் தண்ணி அள்ளி காலை கழுவிவிட்டு உள்ளே சென்று அமர்ந்தாள். மனிதனிற்கு கவலைகளும், சோகங்களும் வரும்போது தான் தலைவலி என்னும் கொடிய நோய் வருகின்றது. தாங்கமுடியாமல் தலையைப் பிடித்தவாறு அருகிலிருந்த சுவரில்

சாய்ந்தாள். அமைதியாக இருந்த ஆலயத்தை அவளுடைய கதறல் இரண்டாக்கியது. முகம்புதைத்து அழுதாள். மனம் எண்ணங்களை கிளறிக்கொடிருந்தது. அதிலும் துக்கமான விடயங்களை கிளறத் தொடங்கினால் சொல்லவா வேண்டும்.

துர்க்கா, வீட்டிற்கு ஒரேயொரு பிள்ளை. அம்மா, அப்பாவினுடைய அரவணைப்பு இல்லாமல் போனதால் சிறுவயதிலிருந்தே பாட்டியிடம் மட்டும் பிரியமாக இருந்தாள். இவ்வாறு வளரும்போது தன்னோடு படிக்கின்ற கண்ணனிடம் காதல் வயப்பட்டாள். துர்க்காவும் கண்ணனும் ஒருவரையொருவர் காதலித்தனர். ஆனால் சொல்லிக்கொள்ளவில்லை. இரண்டரை வருடங்களிற்கு முன்பு பாட்டியும் இறந்து போக தன் கல்வியைத் தொடர்ந்தாள். தனக்கு முன்பே தெரிந்த சிவாவிடம் பழகத்தொடங்கினாள். அவன் சராசரி மனிதனைப் போல அல்ல. பல படிகள் உயர்ந்தவன். சகோதரங்கள் இல்லாத அவள் சிவாவை அண்ணனாக எண்ணினாள். கண்ணனையும், சிவாவையும் இரண்டு கணகளாக கருதினாள். ஒருநாள் “நீங்கள் யாரையாவது காதலிக்கிறீங்களா சிவா அண்ணா?” என்று கேட்டாள் துர்க்கா. சிவா சற்றுத் தயங்கினாலும் தெளிந்தவனாய் தன்னுடைய மனதிலுள்ள காதல் கதையை துர்க்காவிடம் கூறினான்.

“பிறந்ததிலிருந்து எந்தவொரு சந்தோஷமும் கிடைக்கேல்ல, வாழ்க்கையில் முதல் முதலா ஒருத்தியை விரும்பினன். அவளோட வாழனும் எண்டு ஆசையா இருக்கு. ஒவ்வொரு நாளும் அன்பா எவ்வளவு கட்டளை போடுவாள்! இந்த வாழ்க்கை எனக்கு பிடிச்சிருக்கு. சந்தோஷம் என்றதை முதல் தடவையா உணருகிறேன்” என்றான்.

துர்க்காவிற்கு மனதில் ஒரு கர்வம் இருந்தது. உலகத்தில் தன்னுடைய காதல் மட்டுமே உண்மை, தூய்மை என்று நினைத்தாள். தன்னையும், கண்ணனையும் நினைத்து சந்தோஷப்பட்டாள். அந்த ஆணவத்தை தவிடுபொடியாக்கியது சிவாவினுடைய காதல். தன் அண்ணன் சக்தியிடம் வைத்திருந்த அன்பு, உண்மை, நம்பிக்கை எல்லாவற்றையும் பார்த்து சந்தோஷமடைந்தாள். கடவுளிடம் ஒவ்வொரு நாளும் இப்படி ஒரு அண்ணனை தந்ததற்காக நன்றி கூறினாள்.

காதலில் ஹீரோக்கள் இருப்பது போல வில்லன்கள் இருப்பது என்னவோ சங்க காலம் தொடக்கம் இன்றுவரை உண்மைதான். சக்தியினுடைய பெற்றோர்களே வில்லன் வடிவில் வந்தார்கள். காரணம் சாதி. தாங்கள் வேளாளர். சிவா குறைந்த சாதி. “சாதிவிட்டு சாதிக்கு மாறி பொம்பிளை கொடுக்க ஏலாது. அவனோட நீ இனி கதைக்கப்படாது” என்று அறிவுரை கூறி கட்டுக்காவல் வைத்தார்கள். கட்டுக்காவல் எங்கு பலமாக இருக்கிறதோ அங்கே தான் தாண்டிக் குதிக்கும் கால்களும் பலமாகும். அதேபோல தான் சக்தியும் அதையும் மீறி சிவாவுடன் தொலைபேசி அழைப்பில் கதைத்தாள். சில வாரங்களின் பின்னர் தொலைபேசி அழைப்பும் துண்டிக்கப்பட்டது. பெற்றோர்கள் அதையும் தடுத்தனர். இவ்வாறு இருந்தும் சிவாவும்,

மணி ஓசை கலை, இலக்கிய, சமய சஞ்சிகையாக மாதந்தோறும் வெளிவருகின்றது. திறமைமிக்க ஆசிரியர்கள், வடிவமைப்பாளர்களால், எமது நாட்டிலிருந்து பிரசவிக்கும் மணிஓசையின் வளர்ச்சிக்கு வாசகர்களாகிய உங்கள் ஆதரவையும் ஆக்கங்களையும் வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையில் மணி ஓசை உங்கள் வாசலை நோக்கி வருகின்றது .


E-Mail: manioosai@gmail.com

மணி ஓசையின் வங்கி கணக்கு இலக்கம் :DNB 15033066691

(Gave til Kulturell bladet)

ஒவ்வொரு சிறுதொகை பணமும் மணி ஓசையின் வளர்ச்சிக்கு உதவும் . உங்கள் ஆதரவுக்கு நன்றி

வெளிநாட்டுத் தொடர்புகளுக்கு Maniosai
Fossumkroken 7,
0982 Oslo. Norway.



சக்தியும் சந்திக்கக்கூடிய வாய்ப்புத் தொடர்ந்தது. கண்டிப்பு ஓரளவு தளர மறுபடியும் தொலைபேசியூடாக அன்புப் பரிமாற்றம் நிகழ்ந்தது. ஆனால் விதி? காலவேகம் சிவாவும், சக்தியும் சந்தித்து கதைக்கும் வாய்ப்பையும் முடிவுறுத்தியது. துர்க்கா சிவாவுக்கு எவ்வளவோ ஆறுதல் கூறினாள். " அண்ணா இது இப்பிடியே நிலைக்காது. உங்களுக்கும் சக்திக்கும் கல்யாணம் நடக்கும், கவலைப் படாதீங்க. சந்தோஷமாக இருங்கள். இந்த உலகத்தில் உண்மையான அன்பிற்கும், பாசத்துக்கும் கிடைக்கும் கடைசிப் பரிசு கண்ணீர்த் துளிகள் மட்டும் தான்" என்றாள். அவர்கள் பிரிந்து மாதமும் உருண்டோடியது. அன்று அதிகாலை துர்க்கா, அண்ணனிடம் விளையாட்டாக.

"எனக்கு ஒரு சொக்கலேட் கூட வரவில்லை அண்ணா. படு கஞ்சனா இருக்கிறீங்களே.. உங்களுக்கு பிறக்கிறது முழுக்க பொம்புளை பிள்ளையா தான் இருக்கும். சரி பாதியாவது வாங்கித் தாங்கோவன். லவ்வர்ஸ் தான் மற்றவங்கள் எல்லோருக்கும் வாங்கி கொடுக்கோனும்" என்று சீண்டினாள்.

"அவளே என்னை விட்டுட்டு போட்டாள். பிறகு எனக்கு ஆர் இருக்கினம். எப்படி இந்த லவ்வர்ஸ் டேயை கொண்டாடுறது? எப்படி சொக்கலேட் தாறது?" என்றான் சிவா வேதனையோடு. ஒரு வகையில் உண்மை தான். ஆனால் துர்க்கா, இவர்களிடையே இருந்த பிரிவு தான் இறுதிவரை நிலைக்கப் போகிறது என்று நினைக்கவில்லை. கடவுளிடம் சிவா அண்ணாவிற்காக பிரார்த்தித்தாள். ஆனால் பலன்???

"அம்பிகையே.. ஈஸ்வரியே எனை ஆளவந்து கோயில் கொண்ட குங்மக்காரி" என்று ஆலய ஒலிபெருக்கியில் பெரிதாக ஒலித்தபோது சுயநினைவு வந்தவளாக எழுந்தாள் துர்க்கா.

"அம்மா தாயே, சிவா அண்ணாவும், சக்தியும் பிரிஞ்சு ஒரு வருஷம் ஆயிட்டுது. ஆனால் அண்ணாவின்ர கஷ்டங்கள், கவலைகள் மட்டும் குறையவே இல்லை. அண்ணனுக்கு ஒரு வாழ்க்கை இருக்குது. ஆனால் அவன் இறந்த காலத்தில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறான். வாழ்க்கையிலே நிஜத்தைத் தேடி, தனிமையை தேடி போவதாகச் சொல்கிறார். இப்ப சிவாவினுடைய வாழ்கையிலே நிம்மதி எண்ட ஒண்டு எங்கையோ தொலைஞ்சு போச்சு. இதுக்கு ஆரில பிழை சொல்லுறது? அண்ணனிலயா? சக்தியிலயா? அவளின்ர தாய் தகப்பனிலயா?

காரணம் சமூகத்தில் தான். சமூகத்தில் வாழ்கின்ற ஒவ்வொருவனும் ஒரு குழந்தையை பெற்று, வளர்த்து, படிக்கவைத்து திருமணம் எனும் நிலைக்கு வரும்போது மட்டும் இளையவர்களுடைய மனதில் சாதி என்ற ஒன்றை பெரும் பொருட்டாக கருத வைக்கின்றார்கள். தாம் உயர்ந்த சாதி, மற்றவர் தாழ்ந்த சாதி என்று சாதியை வைத்து மற்றவர்களை தாழ்த்துகின்றார்கள்.

குலத்தால் உயர்ந்தவன் குணத்தால் தாழ்ந்தவன். குலத்தால் தாழ்ந்தவன்

குணத்தால் உயர்ந்தவன் என்ற எண்ண ஓட்டத்தில் நீந்தினாள் துர்க்கா.

அவளுடைய கண்கள் ஆலய சுவரின் மீது படிந்தன. "சாதியிரண்டொழிய வேறில்லை." கண்கள் கலங்க அதைப் பார்த்து புன்னகைத்தவாறு நேரம் பார்த்தாள். 12 மணி. குருக்கள் பூஜையை ஆரம்பித்தார். தான் வந்து 3 மணி நேரம் ஆகிவிட்டதை உணர்ந்து சுற்றி வந்து கும்பிட்டு விட்டு அண்ணனுடைய பெயரில் ஒரு அர்ச்சனையும் செய்து விட்டு வீட்டுக்கு திரும்பினாள்.

வீட்டுக்கு வந்து சிறிது நேரம் ஓய்வெடுத்து விட்டு அமரர் கல்கியின் "கள்வனின் காதலி" என்ற நாவலைப் புரட்டினாள். மனதிலுள்ள எல்லாவற்றையும் கவிதைகளாக எழுதினாள். மெல்ல மெல்ல சூரியன் மறைந்து சந்திரன் எழுந்தான். இரவுப் பொழுது தலையை நீட்டியது. மீண்டும் நித்திரை க்காக பாயிலே விழுந்தாள். இயலவில்லை. வாழ்க்கையே நரகமாகியது. உள்மனது ஓலமிட்டது. இந்த நேரம் அண்ணனும் நிச்சயமாய் தனிமையிலே கவலைப்படுவார். அன்பான ஒரு காதல் சாதிக்காக இன்று உடைந்து விட்டது. அதன் பலன் ஒரு ஜீவன் நிம்மதியில்லாமல் ஏங்குகின்றது. எல்லாமே தலை கீழாகிவிட்டது. சிவா தன்னிடம் இறுதியாக கூறியதை நினைவு படுத்திக்கொண்டாள்.

"நீ தங்கச்சி எண்டு என்னோடு பழகியது உண்மையெண்டால் எனக்காக கவலைப் படாதே." அவருக்காக நான் கவலைப் படுவதாக நினைத்துத்தான் அவர் அப்படி சொல்லியிருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள். அப்போது எங்கேயோ படித்த ஒரு கவிதை ஞாபகம் வந்தது.

"ஓசையில்லாமல் அழவும்

வலியை மறந்து சிரிக்கவும் முடிகிறது

சோகத்ததை தான் மூடிவைக்க முடியவில்லை,

காட்டிக் கொடுத்து விடுகின்றது,

என்னையும் மீறி

வெளியேறும் கண்ணீரிலே"

தனக்காகவே எழுதப்பட்ட ஒரு கவிதை போலத் தோன்றியது. 'இந்தக் காதல் எவ்வளவு விசித்திரமானது. என் அண்ணனையே அழ வைத்துவிட்டது. என் அண்ணனிற்கு ஒரு சந்தோஷமான ஒரு வாழ்க்கை அமையும். கடவுளிற்கு தெரியும். சந்தோஷம் என்பது அண்ணாவிற்கு கடந்துபோன பக்கங்களில் கூட எழுதப்படவில்லை என்று. அவன் தலையெழுத்திலுள்ள அத்தனை எழுத்து பிழைகளையும் கடவுள் நிச்சயம் மறுபதிப்பு செய்வார்' என்று மனதில் எண்ணிக்கொண்டாள் துர்க்கா. ஆஞ்சநேயரை மார்பில் வைத்துகொண்டு கண்களை மூடினாள். ஆனால் விழிகள் அழுது கொண்டிருக்கின்றன. துடைக்க விரல்கள் எங்கேயிருக்கின்றன? அப்போது அருகி லிருந்த கரடிப் பொம்மை,

"ஏன் உன் கண்கள் காணுகின்ற நேரமெல்லாம்

கண்ணீர் வடிக்கின்றன? அழாதே..

வாழ்க்கை அழுகையின் மொழிபெயர்ப்பு அல்ல"

என்று கூறுவதைப் போலிருந்தது துர்க்காவுக்கு!

(முற்றும்)


**சந்தாதாரர் ஆகுங்கள்**

மணி ஓசை மாதந்தோறும் உங்கள் இல்லத்தைத் தேடிவர சந்தாதாரராக இணைந்து கொள்ளுங்கள். தபால் செலவு இலவசம். நேரிலோ, மணியோடர் மூலமாகவோ பணத்தைச் செலுத்தலாம்.

| | இலங்கை | நோர்வே |
|---|---|---|
| வருட சந்தா | 600 ரூபா | 300 குறோனர் |
| ஆறு மாத சந்தா | 300 ரூபா | 150 குறோனர் |

இலங்கையில்,
மணி ஓசை
பாரதி இன்ஸ்ரிரியூட்,
மீசாலை மேற்கு,
மீசாலை.
0778051173

வெளிநாட்டில்,
Maniosai
V/ThakshaniGurukulam,
Fossumkroken 7,
0982, Oslo, Norway.
manioosai@gmail.com

வெளிமாவட்டத் தொடர்புகளுக்கு,

அம்பாறை – 0713565678 கொழும்பு – 0785009244 புத்தளம் – 0777005692

# சொல் என்றால்...

ச.மார்க்கண்டு,
விரிவுரையாளர்,
தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தொலைக்கல்விப் பகுதி,
யாழ்ப்பாணம்.

உலகில் தோன்றிய அல்லது தோற்றுவிக்கப்பட்ட மனித இனக்குழுமத்தின் அதியுன்னத வெளிப்பாடாய் அமைந்தது மொழி எனலாம். ஐம்பூதச் சேர்க்கையான உலகின் தார்ப்பரியங்களை, ஐம்புலன்களூடு அறிந்துணர்ந்த மனிதன், ஆறாம் அறிவாகிய சிந்திக்கும் ஆற்றலால் - பரிணாம வளர்ச்சியூடு அமைத்துக் கொண்டதே மொழியெனவும் முடியும். இங்கு தாம் அறிந்தவற்றை அல்லது உணர்ந்தவற்றை மற்றவரோடு பகிரும் விருப்பே மொழி வளர்ச்சிக்கு காரணமாய் இருந்திருக்கும். இவ்வகையான கருத்துப் பகிர்வுக்குக் காரணமான மொழியின் முக்கிய கூறு "சொல்" எனலாம்.

சொல் என்றால் என்ன? என்பதற்கு தமிழின் முதல் இலக்கணப் பனுவலாக இன்று கைக்குக் கிடைத்துள்ள தொல்காப்பியம் தொடக்கம் இன்றைய பேராசிரியரான எம்.ஏ.நுஃமானின் நூலான "அடிப்படைத் தமிழ் இலக்கணம்" வரை பல்வேறு விளக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்மாற்றங்கள் கால, இட, பண்பாட்டு மாற்றங்களூடு மக்கள் வாழ்நெறி மாற்றங்களையும் உள்வாங்கி வெளிக்கொணரப்பட்டவை எனலாம்.

சொல் என்றால் என்ன என்பதனை தொல்காப்பியத்திலிருந்து நோக்குவோம். தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என முப்பகுதியையும் ஒவ்வொன்றும் ஒன்பது இயல்களாக இருபத்தேழு இயல்களையும் கொண்டுள்ளது. இதில் சொல்திகாரம், கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உயிரியல், எச்சவியல் ஆகிய இயல்களூடு சொல் பற்றிய பல்வகைச் செய்திகளையும் வெளிக்கொணர்கிறது.

தொல்காப்பியர் சொல்லதிகாரத் தொடக்கச் சூத்திரத்தில் அதாவது கிளவியாக்க முதற் சூத்திரத்தில், உயர்திணை, அஃறிணை மேற் சொற்கள் நிகழும் என்று கூறுமுகமாக,

"உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே"
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே
(தொல்.சொல்.1)

என்று வகுத்துள்ளாரேயன்றிச் சொல் என்றால் என்ன என்று தெளிவாக உரைக்கவில்லை. எச்சவியல் நிறைவுச் சூத்திரத்திலும்

"செய்யுள் மருங்கினும் வழக்கியன் மருங்கினும்
மெய்பெறக் கிளந்த கிளவி யெல்லாம்
பல்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது
சொல்வரை தறியப் பிரித்தனர் காட்டல்"
(தொல்.சொல் 463)

எனச் சொல் எல்லாவற்றையும் பல்வேறு செய்கையுடைய தொன்னூனெறியிற் பிழையாது சொல்லை வேறுபடுத்துணருமாற்றாற் பிரித்துக் காட்டுக என்ற பொருளிற் கூறினாரேயன்றிச் சொல்லுக்கு வரைவிலக்கணம் கூறவில்லை. ஆகவே தான் சொல்லின் வரைவிலக்கணம் வகுக்கும் வகையில் கிளவியாக்கத்தின் தொடக்கமாக ஒரிரு சூத்திரங்கள் வரையப்பட்டிருத்தல் வேண்டுமெனப் பலரும் அவாவுகின்றனர்.

ஆயினும் பெயரியலின் முதலாம் சூத்திரத்தில் "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" (தொல்.சொல்155) என்று சொல்லாயின் அது பொருளுடைத்து என்றவாறு குறிப்பிடுகின்றார். அதற்கு அடுத்த சூத்திரத்தில் "பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும் சொல்லினாகும் என்மனார் புலவர்"
(தொல்.சொல் 156)

என்பதனூடு பொருளின் வகையுணர்த்துவார். இங்கும் எல்லாச் சொல்லும் என்ற முதற் சூத்திரத்துக்கு உரை வரைந்த சேனாவரையர் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் எல்லாச் சொல்லும் என்று உரை வகுக்கின்றார். ஆனால் இச் சொற்பாகுபாடு,

"சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப அறிந்திசி குனாரே"
(தொல்.சொல் 158)

"இடைச்சொற் கிளவியும் உரிச்சொல் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப"
(தொல்.சொல் 159)

என இதன் பின்னுள்ள சூத்திரங்களிலேயே அமைந்துள்ளமையை அவதானிக்கலாம். இதுவுமன்றி தொல்காப்பியர் செய்யுளீட்டச் சொல்லாக எச்சவியல் முதற்சூத்திரத்தை அமைக்கின்றார்.

(32ம் பக்கம் பார்க்க)

## புலமை ஓசை 03 விடைகள்

### பகுதி I

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 3 | 15 | 2 | 29 | 1 |
| 2 | 2 | 16 | 1 | 30 | 2 |
| 3 | 3 | 17 | 3 | 31 | 3 |
| 4 | 2 | 18 | 1 | 32 | 2 |
| 5 | 1 | 19 | 2 | 33 | 3 |
| 6 | 3 | 20 | 1 | 34 | 1 |
| 7 | 1 | 21 | 2 | 35 | 3 |
| 8 | 3 | 22 | 1 | 36 | 1 |
| 9 | 1 | 23 | 1 | 37 | 2 |
| 10 | 2 | 24 | 1 | 38 | 2 |
| 11 | 1 | 25 | 1 | 39 | 3 |
| 12 | 2 | 26 | 1 | 40 | 1 |
| 13 | 3 | 27 | 2 | | |
| 14 | 3 | 28 | 3 | | |

### பகுதி II

| | | |
|---|---|---|
| 1 | 1 | வியாபாரம் |
| | 2 | புத்தகம் |
| | 3 | மின்விளக்கு |
| | 4 | அமெரிக்காவில் மிலான் நகரில் |
| | 5 | பெற்றோர் |
| 2 | 1 | கடிதம் எழுதப்பட்ட திகதி |
| | 2 | பேராதனைத் தாவரவியல் பூங்கா |
| 3 | 1 | புத்தாண்டு வாழ்த்துக்கள் |
| | 2 | யார் சத்தமிட்டது? |
| 4 | 1 | This is my bag |
| | 2 | Be careful |
| 5 | 1 | அண்ணா சோறு சாப்பிடுங்கள் |
| | 2 | நான் குளிக்கட்டுமா? |
| 6 | 1 | வாடிவென்ன |
| | 2 | மம எலியட்ட யன்னத? |
| 7 | 1 | கவனமாயிருத்தல் |
| | 2 | பிற்போடுதல் |
| 8 | 1 | சகபாடி |
| | 2 | சஞ்சிகை |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 09 | 4 | 16 | 1 | 23 | 1 | 30 | 1 | 37 | 1 |
| 10 | 1 | 17 | 2 | 24 | 2 | 31 | 4 | 38 | 1 |
| 11 | 2 | 18 | 2 | 25 | 1 | 32 | 4 | 39 | 4 |
| 12 | 1 | 19 | 1 | 26 | 2 | 33 | 2 | 40 | - |
| 13 | 2 | 20 | 3 | 27 | 1 | 34 | 4 | | |
| 14 | 1 | 21 | 3 | 28 | 3 | 35 | 3 | | |
| 15 | 2 | 22 | 2 | 29 | 4 | 36 | 1 | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 41 | காலை 4.15 | 47 | 5 | 53 | வலைகள் | 58 | 1.Country |
| 42 | 28 Km | 48 | 5 | 54 | அழைத்து | 58 | 2. Prize |
| 43 | 85 ரூபா | 49 | 2 | 55 | நிழல் | 59 | |
| 44 | 600 m | 50 | 1 லீற்றர் | 56 | இளநீர் | | |
| 45 | 50 | 51 | பழுத்த | 57 | 1.பாடினி | | |
| 46 | 25 | 52 | ஊண் | 57 | 2.மனைவி | | |

# புலமை ஓசை

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2014

## மாதிரி வினாத்தாள் : 04

ஆசிரியர்: செல்வி க.சசியிலா B.A(Hons.) M.A

மணியோசை வெளியீடான தரம் 05 புலமை ஓசை மாதந் தோறும் இலவச இணைப்பாக வெளிவரும்.

2014 இல் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்கள் வினாத்தாளைப் பூர்த்தி செய்து மணி ஓசைக்கு அனுப்பி வைக்கவும்.

அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. மேலும், உயர்புள்ளிகளைப் பெறும் 5 மாணவர்களின் பெயர்கள் சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:- 'புலமை ஓசை'
மணி ஓசை,
பாரதி இன்ஸ்ரிரியூட்,
மீசாலை மேற்கு,
மீசாலை

## புலமை ஓசை 03

**பரிசு பெறுபவர்கள்**


**1ம் பரிசு**
இ. தேனுஜா
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

**2ம் பரிசு**
மு. அச்சுதன்
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி

**3ம் பரிசு**
சி. வேணுகா
புலோப்பளை, பளை

**பாராட்டு பெறுபவர்கள்**

1. சி. தினோஜன்
   – உசன்
2. வி. மனோஜா
   – சங்கத்தானை, சாவகச்சேரி
3. வி. வினுஜா
   – கைதடி மத்தி
4. எ. அருண்குமார்
   – தச்சன்தோப்பு, சாவகச்சேரி
5. என். பானுஜா
   – மீசாலை கிழக்கு, மீசாலை



# சித்தன் பதில்கள்

**ஆறுமுகம் ஜமுனாராணி, அளவெட்டி.**

கேள்வி:- மனிதன் எந்த அளவுக்கு முன்னேறி யிருக்கிறான் சித்தா?

பதில் - "மனிதன் தன் அறிவால் பறவையைப் போல ஆகாயத்தில் பறக்கக் கற்றுக் கொண்டிருக்கிறான். மீனைப் போல் நீரில் நீந்தக் கற்றுக் கொண்டிருக்கிறான். ஆனால், மனிதன் எப்படி மனிதனாக வாழ வேண்டுமோ அப்படி வாழக் கற்றுக்கொள்ளவில்லை!" இது ஒரு அறிஞரின் வருத்தம்!

**என். வைகுந்தன், மன்னார்.**

கேள்வி- ஏன் சித்தா, இந்துக் கோவில்களை மலை உச்சியில் கட்டி வைத்திருக்கிறார்கள்?



பதில் - அடிக்கடி ஏறி இறங்குவது தேக ஆரோக்கியம்! சிறுவயதிலிருந்தே மலையேறி இறங்குவது பழகிப் போய்விட்டால், வயதாகிப் போனாலும் ஏறுவதற்குத் தெம்பாக இருக்கு மல்லவா?

**திருமதி ச. குணேஸ்வரி, மட்டுவில்.**

கேள்வி - சித்தன் அங்கிள்! மேடைப் பேச்சுகளில் செக்ஸ் கலந்து பேசலாமா?

பதில் - மேடைப் பேச்சைப் பற்றி ஒரு மேலைநாட்டு அறிஞர் விளக்கம் தரும்போது, " மேடைப்பேச்சு ஒரு குட்டைப் பாவாடை[Mini Skirt] போல இருக்க வேண்டும். மறைக்க வேண்டியதை மறைப்பதாகவும், அதே நேரத்தில் கவர்ச்சி காட்ட வேண்டியதை காட்டுப் படியாகவும் இருக்க வேண்டும்." என்கிறார்.


**ஆர். சுஜீவன், வட்டக்கச்சி.**

கேள்வி - சாமியார்கள் போல ஞானிகளும் தவறு செய்வார்களா சித்தா?

பதில் - தவறுகளை உணர்ந்து திருந்திக் கொள்பவனும், திரும்பச் செய்யாமல் இருப்ப வனுமே ஞானி! அதனால் ஞானி ஆகிய பின்னர் தவறுகள் செய்யமாட்டார்கள்.

**பீ. நிலக்ஷன், வவுனியா.**

கேள்வி -ஆண்கள் காதலில் தோல்வி அடைந்து ள்ளார்கள் என்பதை தாடிவளர்ப்பதன் மூலமோ, தம்மடிப்ப தன் மூலமோ அறிந்து கொள்கிறோம். இந்த விடயத்தில் பெண்கள் எப்படி?



பதில் – பெண்கள் எந்தப் பழக்கத்தைக் கைவிட்டாலும் தாங்கள் அலங்காரம் செய்வதை மட்டும் கைவிடவே மாட்டார்கள்! ஆனால், காதலில் தோல்வியடைந்த பெண்கள் அலங்காரத்தில் கூட ஈடுபாடு இல்லாமல் இருப்பதைப் பார்த்திருக்கிறேன்!

**தி.கந்தசாமி, சாவகச்சேரி.**

கேள்வி –மனிதன் இழக்கக் கூடாதது எது?

பதில் – பொறுமை! தான் பக்கத்திலே இருக்கும் போதே, தன் மனைவியுடையை மார்பைக் கொத்திக் காயப்படுத்திய அரக்கனையே [காக்கை உருவில்] போகட்டுமென்று பொறுமையாக மன்னித்து விட்டவர் இராமர்! ஆனால், தன்னிடம் சூர்ப்பனகை வந்தபோது அந்தப் பொறுமையைக் கடைப்பிடிக்க அவரால் முடியவில்லை! தம்பி இலக்குவன் மூலமாக அவளின் மூக்கை அறுத்து, ஒரு யுத்த காண்டத்திற்கு வழி வகுத்துவிட்டார்! எனவே, ஒருவன் இழக்கக் கூடாத சொத்துப் பொறுமை தான்!



**மு.சகுந்தலாதேவி, மீசாலை.**

கேள்வி- காதலுக்கும், ஆழமான காதலுக்கும் இடையிலான வித்தியாசம் என்ன?

பதில் – எழுத்தாளர் கல்கி அவர்கள், தன்னுடைய "சிவகாமியின் சபதம்" நாவலில் ஒரு சுவையான விளக்கம் சொல்லியிருக்கிறார். "காதலை நெருப்பு என்று கூறுவது முற்றிலும் பொருத்தமானது. நெருப்பு சொற்பமாக இருந்தாலும் காற்று அடித்ததும் அணைந்து விடுகிறது. பெரு நெருப்பாக இருந்தால், காற்று அடிக்க, அடிக்க நெருப்பின் சுவாலை அதிகமாக கொழுந்து விட்டு எரி கிறது. நெருப்புக்கு காற்று எப்படியோ, அப்படிக் காதலுக்கு "பிரிவு" என்று தோன்றுகிறது. பொய்க் காதலாய் இருந்தால், பிரிவின்போது அணைந்து போகிறது. ஆழமான காதலாக இருந்தால், அது நாளுக்கு நாள் வளர்ந்து பெரு நெருப்பாக மூளுகிறது."

**மஞ்சூரன்,கைதடி.**

கேள்வி-சினிமா நடிகைகள் கடதாசிப் பூக்கள் போன்றவர்கள்! அவர்களுக்கு கவர்ந்திழுக்கும் சக்தி மட்டுமே உண்டேயொழிய மனம் குளிர வைக்கும் மணம் இல்லை என்பது எனது கருத்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்-பூங்காவுக்குச் செல்கின்றோம்! எத்தனை விதமான கலர் கலரான பூக்கள்! அதுவும் நியப் பூக்கள். அந்தப் பூக்கள் எல்லாமே ஒவ்வொரு வகை மணம் வீசுகின்றன.

ஆனால் சினிமா நடிகைகளுக்கு குளிர வைக்கும் மணம் இல்லா விட்டாலும் அகன்ற மனம் இருக்கிறது!



**ஏ.செந்தூரன்,கல்வயல்.**

கேள்வி-முக்கிய வேண்டுதல் ஒன்றுக்காக "ஆயிரத்து ஒரு ரூபா" சேர்த்து வைத்திருக்கிறேன். எந்தக் கோவிலில் செலுத்தி வழிபாடு செய்தால் பலன் கிடைக்கும்? நல்லூர்? சந்நிதி? வற்றாப்பளை?

பதில் – "வழிபாடு, கடவுளை அடையும் பாதி வழி வரை எம்மைக் கூட்டிச் செல்கிறது. காணிக்கை எம்மை கடவுளின் இருப்பிடம் வரை கூட்டிச் செல்கிறது. ஆனால், கஷ்டப்படும் பிறருக்குச் செய்யும் கடுகளவு உதவிதான், எம்மை கடவுளைச் சந்திக்க அனுமதிக்கிறது." என்று ஒரு தத்துவம் இருக்கிறது. உங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் யாராவது கஷ்டப்பட்டவர்கள் இருந்தால் இன்ப அதிர்ச்சி கொடுங்கள் உடனடிப் பலன் கிடைக்கும்!

**எம்.சர்யுதன், சரசாலை.**


கேள்வி – "பிறன் மனை நோக்காதே" என்பது வள்ளுவர் வாக்கு. ஆனால், "பிறன் மனை என்னை நோக்குதே" என்ன செய்கிறது?

பதில் – நீர் நோக்காமல், பிறர் நோக்குறது எப்படி சர்யுதா தெரியும்!

# பாடிப்பறந்த கவியரசு

**8**

**தருவது அபிமன்யு**



கண்ணதாசன் சிறந்த இதழ் ஆசிரியர். தென்றல், தென்றல்திரை இதழ்களை நடத்தியவர். தென்றல்திரை இதழில் திரைக்கலையின் நுட்பங்கள் பற்றிய ஒரு தொடர் வந்தது. அதற்குத் தலைப்பு "எங்கள் தொழில் கேளாய் இளங்கொடியே சொல்லுகிறேன்". திறனாய்வுப் பகுதிக்குத் தலைப்பு: "பார்த்தோம், பட்டது, சொல்கிறோம்". தலைப்புகள் மட்டுமல்ல, படங்களுக்கு அழக் குறிப்புக்கூட அழகான கவிதை நடையில் எழுதுவார்.

நடிகை பத்மினி கார் ஓட்டுவதுபோல் அமைந்த படத்துக்கு:

*வண்ணமயில் கார்ஓட்ட வந்துவிட்டார் என்றாலே*
*எண்ணெய் இல்லாமலே இந்தக்கார் ஓடாதோ !*

தத்துவம் என்பது அறிவின் சாறு. வாழ்வில் பட்டு அறிந்த அனுபவ உண்மைகளின் திரட்டு. அதனால் பொதுவாக அவை புரிந்து கொள்வதற்கு எளிதாக இருப்பதில்லை. ஆனால் கண்ணதாசனின் சந்தக் கவிதைகளில் கூட, தத்துவம் குழந்தையின் சிரிப்பைப்போல் எளிமையாகப் பூத்திருக்கும். இனத்தால், மதத்தால், சாதியால், செல்வ நிலையால் நமக்குள் பேதங்கள் (பிரிவினைகள்) கூடாது என்பதை எவ்வளவு எளிதாக விளக்குகிறார் பாருங்கள் :

*"சுடுகாட்டு எலும்புகளைச் சோதித்துப் பார்த்ததிலே*
*வடநாட்டு எலும்புஎன்று வந்தஎலும்பு இல்லையடி*
*தென்னாட்டு எலும்புஎன்று தெரிந்தஎலும்பு இல்லையடி*
*எந்நாட்டு எலும்பென்றும் எழுதிவைக்க வில்லையடி*
*ஒருநாட்டு மக்களுக்குள் ஓராயிரம் பிரிவை*
*எரியூட்ட வில்லைஎனில் எந்நாளும் துன்படி"*

ஆட்டனத்தி ஆதிமந்தி கண்ணதாசன் படைத்த சிறந்த காவியம். கதையின் தலைவன் ஆட்டனத்தி, சேரமன்னன். வீரத்துடன், ஆடல் கலையிலும் வல்லவனாக விளங்கினான். இவனிடம் ஆடல் கற்க வந்த மருதி, ஆதிமந்தி இருவரும் அத்தியிடம் காதல் கொண்டனர். அவன் நெஞ்சமோ மருதிய்ய விரும்பியது. அவளுக்காகவே கரூர் மன்னனுடன் போர் செய்தான். வென்றான். அதற்குப் படை உதவிய சோழன் கரிகாலனின் மகளான ஆதிமந்தியை மணக்க நேர்ந்தது. மருதி பௌத்தத் துறவியானாள். காவிரிப் புதுவெள்ளத்தில் நீராடும்போது அத்தியை வெள்ளம் அடித்துச் சென்று கடலில் தள்ளியது. அங்கிருந்த மருதி அவனை மீட்டுக் காப்பாற்றினாள். தானே மூச்சை அடக்கி உயிர்நீத்தாள். கணவனைத் தேடிக் கரைவழியே வந்த ஆதிமந்தி அவனைக் கண்டாள். இருவரும் மருதிக்குச் சிலைவடித்துக் காதல் தெய்வமாய் வழிபட்டனர். இது காப்பியக்கதை. சங்க இலக்கிய வரலாற்றுக் குறிப்பைக் கொண்டு கண்ணதாசன் படைத்த அழகிய குறுங்காவியம் இது. இதில் வரிக்குவரி அழகிய சொல்லாட்சியால் மயக்குகிறார் கவிஞர்.

ஆதிமந்தி காதல் உணர்வால் உறக்கம் இன்றித் தவிக்கிறாள். அறையை விட்டு வெளியே வருகிறாள். மருதியுடன் ஆட்டனத்தி சேர்ந்திருக்கும் காட்சியைப் பார்க்கிறாள். திகைக்கிறாள். இதைப் பண்பாடு குறையாத குறிப்பு மொழியால் வருணிக்கிறார் கண்ணதாசன். இதில் அவரது அழகிய சொல்லாட்சித் திறன் விளங்குகிறது.

"துயிலோடும் பகையான தோகை கண்டாள்
தோள்தூங்கும் வாள்வீரன் துணையும் கண்டாள்
பயிராகிப் போயிற்றாம். அறுவ டைதான்
பாக்கிஎன்னும் நிலைகண்டாள் பதுமை ஆனாள்"

மற்றொரு சிறந்த குறுங்காவியமான "மாங்கனி"யில் மாங்கனியின் சிவந்த உதடு காதலன் முத்தமிட்டதால் வெளுத்திருக்கிறது. இதை,

"காதல், துடிப்பினால் சிவப்பைத் தின்ற
துட்டனும் யாரோ."
எனப் பாடுகிறார்.

மாங்கனி தன் தாயிடம் வாய்திறந்து இனிமையாகப் பேசுகிறாள். இதைக் கவிஞர்,

"அந்தப் பூக்காட்டின் வாய்ப்பூட்டைத் தேன் திறக்கும்"

என்று உருவகச் சொல்லாட்சியால் உரைக்கிறார்.

கவிதையின் அழகுக்கே அழகு சேர்ப்பது உவமை. இது கற்பனைக்கு வளம் சேர்ப்பது. ஒரு பொருளுக்கு ஒப்பாக இன்னொரு பொருளைக் காண்பவன், வாழ்க்கைக்கே புதுப்பொருள் காண்கிறான். உலகில் ஒரு முறை ஒரு வடிவத்தில் பிறக்கின்ற ஒருபொருள், எண்ணங்களில் பலமுறை பலவடிவங்களில் புதுப்பிறப்பு எடுக்கிறது. அந்தப் புதுமையில் வாழ்க்கை புதுச்சுவை பெறுகிறது. உவமை எப்போதும் இனிப்பது இதனால்தான்.

கண்ணதாசனின் உவமைகளிலே ஒரு புதுமை இருக்கும். மாலைப் பொழுது, மலைகளிடையே மறையும் சூரியன், காதல் உணர்வுடன் ஓர் இளைஞன் இக்காட்சியைக் காண்கிறான்.

"மார்பகத்தின் ஆடைக்குள் கடிதம் வைக்கும்
மங்கையரின் கைபோல, மலைகள் ஊடே
தேர் உருட்டிக் கதிர் சென்றான்...."

என்று இதை அழகான உவமையால் சொல்கிறார் கண்ணதாசன்.

மாங்கனியின் சிரிப்பு எப்படி ஒலிக்கிறது?

"வெள்ளிக்காசு ஒருபிடியைக் கீழே கொட்டி
விட்டாற்போல் அலட்சியமாய்ச் சிரித்து"

என்கிறார் கண்ணதாசன்.

ஆட்டன் அத்தியை அடித்துப் போகும் வெள்ளம் எப்படிப் பெருகி வந்தது தெரியுமா? கதைக் கட்டத்தை வெள்ள ஓட்டத்துடன் சேர்த்து உவமையால் காட்டுகிறார்.

"காவிரி வெள்ளம் கணிகை மா மருதிகொண்ட
கவலைபோல் மேலும் பல்கும்...."

காதலில் தோற்றுக் கண்ணீர் வடித்தபடி இருக்கும் மருதியின் துயரத்தைப் போல் மேலும் மேலும் வெள்ளம் பெருகுகிறது என்கிறார்.

உவமையை வடிவம் மாற்றிப் புதிய முறையில் சொல்வது இவரது தனிச்சிறப்பு. "மாங்கனி" காவியத்தில் நடனமாடும் மாங்கனியை வருணிக்கிறார்.

"வாள் போன்ற விழி" என்பது பழமையான மரபு உவமை. கண்ணதாசன் சொல்லும் முறையில் சிறிய மாற்றம் செய்து இதைப் புதுமையாய்ப் பொலிய வைக்கிறார். விழியை வாளாக உருவகம் செய்துவிட்டு இமைக்கு வாள் உறையை உவமை காட்டுகிறார்.

"கொலை வாளுக்கு உறைபோல விழிவாளுக்கு இமை"

சிங்கப்பூர்–மலாயா நாடுகளில் சுற்றுப்பயணம் செய்த கண்ணதாசன் பினாங்கு நகரில் தமிழர், மலாயர், சீனர் ஆகிய மூன்று இன மக்களும் ஒற்றுமையாய் வாழ்வதைக் கண்டார். அமைதிப் பண்புக்கும் தாய்மை அன்புக்கும் எடுத்துக்காட்டாக இருப்பது பசு. பசுக்கள் தமக்குள் உறவு பூண்டு ஒற்றுமையாக இருப்பது போல இம்மக்கள் ஒற்றுமையாய் வாழ்வதைக் கண்டு மகிழ்கிறார். கவிதையில் பாராட்டுகிறார். வாழ்த்துகிறார்.

"ஆவினம் தமக்குள் காணும்
அன்பினம் போல இங்கே
மூவினம் தமிழ், மலாயர்
மூப்பு இலாச் சீனர் சேர்ந்து
சாவிலும் வாழ்விலும் சேர்
சமத்துவ வாழ்க்கை வாழும்
ஆவணம் கண்டேன் ! இந்த
அன்பிலே பினாங்கு வாழ்க."

இந்த ஒற்றுமையும் சமத்துவமும் நீடிக்க வேண்டும் என்ற உயர் நோக்கம் இந்த உவமையில் பளிச்சிடுகிறது. பினாங்கு கண்டேன் என்னும் இக்கவிதை 5ஆம் தொகுதியில் இடம்பெற்றுள்ளது.

(கவியரசு வருவார்...)




# யார் முட்டாள்

அந்தக் காலத்தில் மிகவும் புகழ் பெற்றிருந்த ஒரு தத்துவ ஞானி முல்லாவைச் சந்திக்க விரும்பி அவரை எப்பொழுது சந்திக்க முடியும் என்று கேட்டுக் கடிதம் அனுப்பியிருந்தார்.

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வந்தால் தம்மைச் சந்திக்க வசதியாக இருக்கும் என்று முல்லா மறு மொழி அனுப்பியிருந்தார்.

அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் தத்துவ ஞானி முல்லாவின் வீட்டுக்கு வந்தார். ஆனால் தவிர்க்க முடியாத ஓர் அலுவல் காரணமாக அந்த நேரத்தில் முல்லாவினால் வீட்டில் இருக்க இயலாமல் போய் விட்டது.

தம்மை வரச் சொல்லிவிட்டு முல்லா வீட்டில் இல்லாமல் போனது அவர் வேண்டுமென்றே தம்மை இழிவுபடுத்தப் போட்ட திட்டம் என்று தவறாகக் கருதி கடுங்கோபம் கொண்ட தத்துவஞானி, ஒரு சுண்ணாம்புக் கட்டியை எடுத்து முல்லாவின் வீட்டுக் கதவில் "முட்டாள் கழுதை" என்று எழுதிவிட்டுச் சென்றார்.

சற்று நேரங் கழித்து வீடு திரும்பிய முல்லா தன் வீட்டுக் கதவில் எழுதப்பட்டிருந்த சொல்லைப் பார்த்து விட்டு அவர் மனைவியிடம் விசாரித்தார்.

நடந்த நிகழ்ச்சியை மனைவி அவரிடம் விளக்கிச் சொன்னார். உடனே முல்லா அந்தத் தத்துவ ஞானியின் வீட்டிற்குச் சென்றார்.

முல்லாவைக் கண்டதும் தத்துவ ஞானிக்கு அச்சமாக இருந்தது. அவரைப் பற்றி முட்டாள் கழுதை என்று அவர் வீட்டுக் கதவில் எழுதியது கண்டு கோபம் கொண்டு முல்லா தம்மிடம் சண்டை போட வந்திருக்கிறாரோ என்று எண்ணினார்.

ஆனால் முல்லாவோ, ஞானியைப் பணிவுடன் வணங்கி " அறிஞர் பெருமானே, என் வீட்டுக் கதவில் தங்கள் பெயரை தாங்கள் எழுதிவிட்டு வந்திருப்பதைக் கண்டு தாங்கள் வந்து சென்ற விஷயத்தை அறிந்து கொண்டேன். மன்னிக்க வேண்டும், எதிர்பாராத அலுவல் காரணமாக தாங்கள் வந்த சமயம் வீட்டில் இருக்க முடியாமல் போய்விட்டது" என்றார்.

தன்னையே முட்டாள் கழுதை ஆக்கிவிட்ட முல்லாவின் அறிவுச் சாதுரியத்தைக் கண்டு தத்துவஞானி வாயடைத்துப் போய்விட்டார்.

---

# வியாபாரத் தந்திரம்

பேருந்து நிலையத்தில் பழ வியாபாரம் செய்யும் முதியவர் ஒருவர், அந்தப் பேருந்தில் பழக் கூடையுடன் ஏறினார். "ஐந்து பழங்கள் பத்து ரூபாய்!" என்று கூவி, பழங்களை விற்க முயன்றார். எவரும் பழம் வாங்க முன்வரவில்லை. சுமக்க முடியாமல் சுமந்தபடி முதியவர் கீழே இறங்கியதும், இளைஞன் ஒருவன் பேருந்தில் ஏறினான். "ஆறு பழங்கள் பத்து ரூபாய்!" என்று கூவினான். அவனுக்கு நல்ல விற்பனை!

மற்றொரு பேருந்தில் ஏறிய முதியவர் அங்கும், "ஐந்து பழங்கள் பத்து ரூபாய்!" என்று விற்க முயன்றார். பலன் இல்லாமல் போகவே, கீழே இறங்கி விட்டார். அடுத்து, "ஆறு பழங்கள் பத்து ரூபாய்" என்று கூவியபடி அந்தப் பேருந்தில் ஏறிய இளைஞன், எல்லாவற்றையும் விற்பனை செய்தான்!

மிகப் பெரிய கம்பெனியின் விற்பனை ஆலோசகரான ஒருவர் இந்தக் காட்சியை பார்த்துக் கொண்டிருந்தார். முதியவரை அருகில் அழைத்தவர், "அந்த இளைஞனின் சாமர்த்தியம் உங்களிடம் இல்லையே! அவனுக்குப் போட்டியாக நீங்களும் ஆறு பழம் பத்து ரூபாய் என்று விற்றால்தானே உங்களுக்கு விற்பனை ஆகும். அதிகக் கொள்முதல் மூலம் குறைந்த விலைக்கு பழங்களை வாங்கி, லாபத்தைக் குறைத்து அதிக விற்பனை செய்யப் பழகுங்கள் தாத்தா!" என்று தனது ஆலோசனைகளை அள்ளி விட்டார்.

முதியவர் சிரித்தபடி, "போய்யா... அவன் என் மகன். இந்தப் பழமும் அவனதுதான். "ஆறு பழம் பத்து ரூபாய்" என்று விற்றால்... சட்டென்று வாங்குவதற்கு, எங்கட சனத்துக்கு மனசு வராது. அதனால் நான், "ஐந்து பழம் பத்து ரூபாய்" என்று கூவிக்கொண்டு போவேன். பிறகு, "ஆறு பழம் பத்து ரூபாய்"என்று அவன் வந்து சொன்னதும்... "அடடே லாபமா இருக்கே" என்று சனங்கள் சட்டென்று வாங்கிடுவாங்கள். அவன்தான்யா உண்மையான வியாபாரி. சனங்களோட மனசை மாத்தறதுக்குத்தான் என்னை முதலில் அனுப்புறான்!" என்றார் முதியவர்.

# சிங்கம் அசிங்கம் ஆனது

ஒரு சேர்க்கஸ் குழுவிடம் சிக்கி கூண்டில் அடைபட்டுக் கிடந்த சிங்கத்துக்கு தினமும் சாப்பிட ஒரு கிலோ இறைச்சி மட்டுமே கொடுத்தார்கள். காட்டில் சுதந்திரமாக சுற்றித் திரிந்து மான்களை கணக்கில்லாமல் வேட்டையாடித் திரிந்த நாட்கள் அதன் நினைவுகளில் வந்து ஏக்கத்தைக் கூட்டியது. அந்த நாட்கள் திரும்பவும் வராதா என்று இறைவனை அது வேண்டியது.

ஒரு நாள் அமெரிக்காவிலிருந்து வந்த மிருகக் காட்சிசாலை உரிமையாளர் அதை விலைக்கு வாங்கினார். சிங்கம் கப்பலில் ஏற்றப்பட்டு அமரிக்காவுக்கு பயணமானது. தனது பிரார்த்தனைகள் பலித்து விட்டதாக சந்தோசப் பட்டது சிங்கம். தனக்கு ஏ.சி அறை கொடுத்து, தினமும் ஒன்றிரண்டு ஆடுகளையாவது சாப்பிடக் கொடுப்பார்கள் என்று நாக்கை சப்பு கொடிக்கொண்டது.


அமெரிக்காவில் சென்று இறங்கிய முதல் நாள் காலையில் அதற்கு அழகான பொதியில் உணவு கொடுத்தார்கள். ஆசையோடு அதை பிரித்த சிங்கம், உள்ளே வாழைப் பழங்கள் மட்டுமே இருப்பதை பார்த்து ஏமாந்து போனது. நாடு விட்டு நாடு மாறி வந்திருக்கும் நேரத்தில், இறைச்சி கொடுத்தால் வயிறு கெட்டுவிடும் என்ற கவலையில் தருகிறார்கள் என நினைத்தது அது.

ஆனால் அடுத்த நாளும் வாழைப்பழம்தான் கொடுத்தார்கள். மூன்றாவது நாள் உணவு கொண்டு வந்து கொடுத்தவனை கொஞ்சம் நிற்கச் சொல்லிவிட்டு பிரித்துப் பார்த்தது. அன்றும் அதே! வாழைப்பழந்தான். உணவு கொடுத்தவனைக் கோபத்தோடு ஓங்கி அறைந்துவிட்டு, நான் யார் தெரியுமா? காட்டுக்கே ராஜாவான சிங்கம், எத்தனை விலங்குகளை வேட்டையாடிச் சாப்பிடுவேன் தெரியுமா? கேவலம் எனக்கு வாழைப்பழம் தருகிறீர்கள். என்ன ஆச்சு உங்கள் நிர்வாகத்துக்கு! என்று சத்தம் போட்டது.

உணவு கொடுத்தவன் பணிவாகச் சொன்னான். ஐயா! தாங்கள் சிங்கம் என்பது எனக்கு தெரியும். ஆனால் நீங்கள் இங்கு வந்திருப்பது குரங்கின் விசாவில் அதனால் குரங்குக்கான உணவைத்தான் உங்களுக்குத் தரமுடியும்!

கருத்து:-

**தெரியாத இடத்தில், குரங்கு மாதிரி அவதிப் படுவதைவிட, சொந்த மண்ணில் சிங்கமாக இருப்பது நல்லது.**



# புத்திசாலித்தனம்

ஓர் ஊரில் கண்பார்வை அற்ற ஒருவர் பிச்சை எடுத்துப் பிழைத்து வந்தார். அவர் தினமும் “கடவுளே என்னை இப்படிப் படைத்து விட்டாயே...உனக்குக் கண் இல்லையா? தினமும் நான் கஷ்டப்படுகிறேனே...” என்று புலம்பியபடி கடவுளைத் திட்டிக் கொண்டேயிருந்தார்.

அவனது திட்டு பொறுக்க முடியாமல் கடவுள் ஒருநாள் அவர் முன் தோன்றி, “நான் கடவுள் வந்திருக்கிறேன். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள். ஆனால் ஒரு நிபந்தனை. ஒரே ஒரு வரம் மட்டும்தான் கேட்க வேண்டும்” என்றார்.

பார்வையற்றவரும் அதற்கு ஒப்புக் கொண்டு சிறிது நேரம் யோசித்தார். பின்பு சிறிது நேரம் யோசித்து கீழ்கண்ட வரத்தைக் கேட்டார்.

“ராஜவீதியில் என்மகன் தங்கத் தேர் ஓட்டி விளையாட, அவனைப் பெற்ற தாய் வெள்ளிக் கிண்ணத்தில் பால் சோறு ஊட்டுவதை என்னுடைய வீட்டின் ஏழாவது மாடியிலிருந்து நான் பார்த்து மகிழ வேண்டும்.”

இந்த வரத்தில் பார்வை இல்லாதவன், தனக்குப் பார்வை வேண்டும், ராஜபோக வாழ்க்கை வாழ வேண்டும், நூறாண்டு வாழ வேண்டும், ஏழு மாடி வீடு வேண்டும் என்பதையெல்லாம் ஒரே வரத்தில் கேட்டு விட்டான்.

அவனுடைய புத்திசாலித்தனமான பதிலைப் பாராட்டிய கடவுள் அவன் கேட்ட வரத்தைக் கொடுத்து மறைந்தார். புத்திசாலித்தனம் வாழ்க்கையில் முன்னேற முக்கியம் என்பது உண்மைதானே?




# உள்ளத்தனையது உயர்வு

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்கிறார் தொல்காப்பியனார். "மேதியினில் இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்" என்கிறார் ஔவை மூதாட்டியார். "செயற்கரிய செய்வார் பெரியோர், சிறியோர் செயற்கரிய செய்கலாதார்" என்கிறார் வள்ளுவனார்.

இவர்களைப்போலன்றி வேறொரு வகையில் உயர்ந்தவர்களைக் காட்டுகின்றார் பவணந்தியார். "மக்கள், தேவர், நரகர் உயர்திணை, மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை" என்கிறார் இவர்.

தொல்காப்பியனார் கூறும் உயர்ந்தோர் - ஔவையாரும் வள்ளுவனாரும் சொன்ன பெரியோர்களா? அல்லது பவணந்தியார் சொன்ன மக்களும் தேவரும் நரகருமா?

உண்மையில், உயர்ந்த மனிதர் அல்லது உயர்திணை என்று கூறத்தகுதியுடையவர் யாவர் என்பதைச் சிறிது ஆராய்வோம்.

மக்களாகவோ தேவராகவோ அன்றி நரகராகவோ இருந்து விட்டால் மாத்திரம் அவர்கள் உயர்திணையாக அல்லது உயர்ந்தவர்களாகக் கருதப்பெறுவது பொருத்தமற்றது. மக்கட் பண்பில்லாதவர்களை மக்கள் என்றும், தேவப் பண்பில்லாதவர்களைத் தேவர் என்றும் சொல்வது இயலாது, ஏனெனில்

"விலங்கொடு மக்களனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

என்று வள்ளுவனார் கல்வியறிவில்லாத ஒருவனை அஃறிணையாக்குவதைக் காண்கிறோம்.

அப்படியானால், ஒருவனை அவன் கற்ற கல்வி அறிவைக் கொண்டு உயர்ந்த மனிதனாகக் கணிக்கலாமா? அல்லது உயர்ந்த சாதி, குலம், பட்டம், பதவி, பணம் முதலிய தகைமைகளைக் கொண்டு உயர்ந்த மனிதன் என்று காட்டலாமா? இவை எவையுமே இல்லை. ஒருவன் தனது மனம் அல்லது உள்ளத்தளவில் எவ்வளவு வளர்ச்சி அல்லது பண்பாடுபெற்று உள்ளானோ அவ்வளவுக்குத்தான் அவன் உயர்ந்த மனிதனாக மதிக்கப் பெறுகிறான்.

"வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு"

என்று இலக்கணம் வகுக்கிறார் வள்ளுவர்.

தண்ணீரில் வளரும் தாமரை, தண்ணீர் உயர்வுக்கேற்ப உயர்ந்து வளரும். அதுபோல மனிதனும் தனது உள்ளத்தின் வளர்ச்சிக்கேற்ப உயர்வடைகிறான். இது வள்ளுவர் காட்டும் உயர்திணையாகும். இதிலிருந்து நாம் அறியக்கிடப்பது என்ன? தண்ணீர்தான் தாமரையை உயர்த்துகிறது; தண்ணீர் மட்டம் உயராதபோது தாமரை அம்மட்டத்துக்குமேல் உயர்வதில்லை. அதுபோல, உள்ளம் வளரும் அளவுக்கு மனிதன் உயர்வடைகிறான்; அது வளராதவிடத்து அவன் உயர்வடைவதில்லை என்பதாகும்.

இவ்விதமாக உயர்ந்த நிலை அடைவதற்கு ஒருவன் மன உறுதி பெற்றிருக்க வேண்டும். அன்றேல் அவனுடைய சொல்லிலோ செயலிலோ உறுதி பிறக்காது. அப்போது அவர்கள் வாய்ச்சொல்லில் வீரராக இருந்து விட்டாலோ அவர்கள் தாம் இழிந்த நிலைக்கு போவதுமல்லாமல் ஏனையோரையும் இழிநிலைக்குத் தாழ்த்தி விடுவர். இன்றைய காலகட்டத்தில் மக்கள் படும் அவல நிலைக்கு இந்த வாய்ச்சொல் வீரர்தாம் காரணகர்த்தாக்கள்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணஞ் செயல்"

என்று தமிழ்மறை கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

இனி, உயர்திணைக்குரிய அல்லது உயர்நிலை பெற்ற பாத்திரங்கள் சிலரைப் பழைய இலக்கியங்களிலும் நமது கால வரலாற்றிலும் தேடிப் பார்ப்போம்.

## பாரதத்தில்...

பாரதக்கதையிலே, பாண்டு மைந்தர், ஏனைய மக்களிலும் பார்க்க நல்லவர்களாக, வல்லவர்களாக, உள்ளத்தால் உயர்ந்து விளங்கக் காண்கிறோம். தருமன் தலைமையில் தம்பியர்கள் வழிநடந்து செல்கின்றார்கள். அத்துடன் கண்ண பரமாத்மாவின் நட்பும் கிடைக்கிறது. அருச்சுனன் வில்லுக்கு விஜயன் என்று பெயர் பெறுகிறான். வீமனும் மற்றையோரும் தமக்கு ஈடு இணையற்ற வீரராக உயர்கிறார்கள். இவ்விதமாக சாதாரண சத்திரியர்களுக் குரிய வீரர்களை விட ஒரு படி உயர்ந்து விளங்குகின்றார் கள்.

ஆனால் துரியோதனனுடன் சூதாடிச் சொத்துச் சுகம்



இழந்தபோதும், பாஞ்சாலி மானபங்கப்படுத்தப்பட்ட போதும் பொறுமை காத்தார்களே! அப்பொழுது அவர்கள் மேலும் ஒரு படி உயர்ந்து விடுகிறார்கள். தம்பிமாரை சாந்தப்படுத்திய தருமன் அவர்களை வனவாசத்துக்கு இட்டுச் செல்கிறான். அங்கும் துரியோதனனால் இழைக்கப்பெற்ற கொடுமைகளைச் சகித்தும் சிலவேளை துரியோதனனுக்கு உதவி செய்தும் குன்றின் சிகரமாய் உயர்ந்து நிற்கின்றார்கள் பாண்டவர்கள்.

யாருக்கும் கிடைக்காத சிறப்புப் பெற்ற தம்பிமார் இருப்பது அறிந்தும், தனது மன உறுதி தவறாது செஞ்சோற்றுக் கடன் கழித்த கர்ணன் தனது உயிர்ப் பாதுகாப்புக்களான கவச குண்டலங்களையும் தான் செய்த புண்ணியத்தையும் கொடையாக்கி உயர் நிலைபெறுகிறான்.

"உயர்திணைப் பண்பு அதுவே"

ஆனால் துரியோதனனோ, அரச குலத்தில் உதித்தான் ஆயினும், பேராசையினாலும் பொறாமையினாலும் உள்ளம் துருப்பிடித்து, இழிநிலைக்கு இறங்கி விலங்காக மாறி மடிந்து போகின்றான்.

## இராமாயணத்தில்...

இராமாயாணத்திலே, அரசியல் நுட்பம் தெரிந்தவர்களான கைகேயி, கேட்பார் புத்திகேட்டு மனம் தடுமாறி இராமன் முடி சூடுவதைத் தடுத்து கெட்டவளாகிறாள். ஆனால் கோசலையோ இராமன் என்றாலும் பரதன் என்றாலும் என் பிள்ளைகள் தாமே என்ற அருள் நிலையால் உயர்ந்து அமைதி பெறுகிறாள். வனம் செல்லும் இராமனுக்கு ஏதும் தீங்கு நேருமாயின் அந்த இடத்தில் "நீ உன் உயிரை விடவேண்டும்" என்று இலக்குமணனுக்கு உறுதி கூறி உயர்வடைகிறாள் சுமித்திராதேவி. பரதனோ என்றால்

"தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினையென்ன நீத்துச் சிந்தனை முகத்திற் றேக்கிப்
போயினை என்ற போது புகழினோய் தன்மை
—கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேள் ஆவரோ தெரியின்
—அம்மா"

என்ற குகனின் கூற்றுப்படி, தனக்கு வலிய வந்த இராச்சியத்தை வேண்டாத செல்வம் என விடுத்து, ஆயிரம் இராமராய் உயர்ந்து, உலகின் ஓர் இராமனான அண்ணனிடம் செல்கிறான், பரதன்.

"இராவணன் மேலது நீறு" என்று பாடும் அளவுக்கு சைவ உலகத்தில் பிரபலம் அடைந்த சிவபக்தனான இராவணன், தனது தவ வலிமையைத் தவறாகப் பயன்படுத்துகிறான். மாற்றான் மனைவியை விரும்பிச் சிறை வைக்கிறான்; ஈற்றிலோ அரக்கனாகவே மாண்டு போகின்றான். ஆனால் அவனது தம்பிமாரான கும்பகர்ணனும், விபீஷணனும் சிறிது முன்னேறி, பிறன் மனை விரும்பிய குற்றத்தை எடுத்துக்கூறி, அவனை நல்வழிப்படுத்த முயன்று தோற்றுப்போகின்றனர். கும்பகர்ணன் நன்றிக் கடனாக, இராவணனுக்காக போர் செய்து மாழ்கிறான்; விபீஷணனோ, மனித நிலைக்கு உயர்ந்து இராமரைச் சரணடைகிறான்; தெய்வமாகின்றான்.



வாலி வானரமாகவே மடிந்து போக, சுக்கிரீவன் இராமனது நட்பைப் பெற்று மனிதனாக உயர்கிறான். அனுமன் மேலும் உயர்ந்து இராம பக்தனாகி வணக்கத்துக்குரியவனாய் உயர்கிறான். சூர்ப்பனகை இராவணனது அழிவிற்கு வழி கோலுகின்றாள். ஆனால் திரிசடை என்னும் மங்கை நல்லாள் மனித நேயம் கொண்டவளாக உயர்ந்து காணப்படுகின்றாள்.

## சிலப்பதிகாரத்தில்...

இனி, சிலப்பதிகாரத்தில் சிறிது நுழைந்து பார்ப்போம். கணிகையர் குலத்துதித்த மாதவி, கோவலனை மணந்து ஏகபுருஷவிரதியாகவே வாழ்கிறாள். பின்பு கோவலன் பிரிந்து சென்றபோதும், அவன் இறந்த பின்னும் தன் உயர் நிலையிலிருந்து மேலும் உயர்ந்து துறவறம் பூணுகின்றாள். அத்துடன் தன் மகள் மணிமேகலைக்கு



கண்ணகியைத் தாயாக்கி மகிழ்கிறாள். மணிமேகலையையும் துறவியாக்கி ஓர் ஒப்பற்ற உயர்நிலையைப் பெறுகின்றாள். கண்ணகியோ பத்தினித்தெய்வமாகி மூவேந்தராலும் போற்றப் பெறுகிறாள். முத்தமிழாலும் பாடப் பெறுகின்றாள்.

மனிதனாகப் பிறந்தவன் தனது ஆறாவது அறிவைக் கொண்டு செயற்கரும் செயல்களைப் புரியவேண்டும். அப்போது தான் அவன் உயர்ந்தவனாகின்றான்.

சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகள், மரபின்படி தன் அண்ணனுக்கு அரசுரிமை கிடைக்க வழிவிட்டுத்தான் துறவியாக உயர்ந்து விளங்குகின்றார்.

சாதாரண மனிதனாகப் பிறந்த மோகனதாஸ் கரம்சந் காந்தி, அரிச்சந்திரன்கதை, யேசுநாதர் காவியம், புத்தர் துறவு, முகமதுநபி கதை என்று எல்லாவற்றையும் கற்று உள்ளத்தைப் பண்படுத்தி மாகாத்மா காந்தியாக உயர்வடைந்தார். உலகத்துக்கே வழிகாட்டியானார்.

"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளர்"

என்ற குறளுக்கு இலக்கணமானார்.

அதுபோலவே, ஜவகர்லால்நேரு, ராஜாஜி, காமராசர், சுப்பிரமணிய பாரதியார் போன்ற பெரியோர்கள் பலரும் தமக்கென வாழாது பிறர்குரியவராக உள்ளத் தெளிவோடும், மன உறுதியோடும் வாழ்ந்து செயற்கரிய செயல்களைச் செய்து உயர்ந்த நிலை பெற்றார்கள்.

ஆகவே, மனிதனாகப் பிறந்தால் மாத்திரம் ஒருவனை உயர்திணையாக உயர்ந்தவனாக கொள்வது பொருந்தாது. அவன் தனது ஆறாம் அறிவைக் கொண்டு செயற்கரும் செயல்களைச் செய்யவேண்டும். அப்போது தான் அவன் உயர்ந்தவனாகின்றான்.

அங்ஙனம் அந்த ஆறாம் அறிவு பயன்பெறாதவிடத்து அவன் சாதாரண மனிதப்பிறவிதான். அந்த ஆறாம் அறிவை இழக்க நேரும்போது ஐந்தறிவு பெற்ற விலங்குக்கு சமனாகிறான்.

எனவே, பெறற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றவர்கள் தமது ஆறாம் அறிவை வளர்த்து, உள்ளத்தை பக்குவப்படுத்திச் செயற்கரிய செயல்களைச் செய்து உயர்வடைவோமாக!


யாழின் தலைசிறந்த ஆசிரியரின்
**A/L, G.A.Q Part I,**
**B.A Part I, Final**
ஆகியவற்றுக்கான "அரசியல்" பாட வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

- பரந்தன் - சக்தி உயர் கல்லூரி
- பளை - சக்தி கல்வி நிலையம்.
- மீசாலை - உயர் கலைக் கல்லூரி
- ஆரியகுளம் - Economics Hall
- பருத்தித்துறை - சதா பொன்ஸ்

ஆகியவற்றின் அரசியல் ஆசிரியர்.

தனிப்பட்ட வகுப்புகளும் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு—
ஆசிரியர் — எம்.புவனதாஸ்
0774652439, 0766704142



**ENGLISH CLASSES**

English classes for year 9 - O/L, A/L, G.A.Q part I, Part II and those who wish to go abroad.

- Personal classes
- Group classes

ஆண்டு 5 தொடக்கம் O/L, A/L, G.A.Q Part I, Part II, மற்றும் வெளிநாடு செல்ல விரும்பவர்களுக்கும் ஆங்கிலம் இலகுவான முறையில் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்

- தனிப்பட்ட வகுப்புக்கள்
- குழு வகுப்புக்கள்

To Contact :- 0774078687
தொடர்புகளுக்கு:- 0774078687

# 01 இதயக் குளத்திலிருந்து...

கம்பநேசன்

இம் மாதம் முதல் என் இதயக் குளத்தின் ஈரப் பதிவுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள எண்ணுகிறேன். உற்சாகத் தெப்பலாய் ஊர் கூடிக் குளித்தால் இந்த இதயக் குளம் ஈரத்தோடு தன் பதிவுகளைத் தொடரும். தொடர்ந்து ஏதாவது எழுதுங்கள் என்று உற்சாகமூட்டும் ரஜனியின் அன்பு இந்த முயற்சிக்கு வழிசெய்துள்ளது. என் மனதில் ஆழப் பதிந்து என்னைச் சிந்திக்கத் தூண்டிய ஏதோ ஒரு சம்பவத்தை மாதா மாதம் உங்களுடன் பகிர்ந்து கொள்ள எண்ணுகிறேன். என் குருநாதர் கம்பவாரிதி அவர்கள் என் எல்லாத் துறைகட்கும் போல இத்துறைக்கும் வழிகாட்டித் துணைசெய்கிறார். அவர் மீது கொண்ட அன்புப் பெருக்கால் அவர்பற்றிய மனப்பதிவையே இம்மாதப் பதிவாய் இங்கு தருகிறேன்.

**ஆட்கொண்டு அருள் செய்த ஆசான்.**

அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி அவர்களை அறியாதவர் இல்லை. ஒரு நல்ல பேச்சாளர், ஒரு சிறந்த இலக்கிய கர்த்தா, சமூகப் பொறுப்பு வாய்ந்த வழிகாட்டி, புரட்சியாளன், புதுமைவாதி என பல பக்கங்களை தனதாக்கிக் கொண்டவர். அவர் தொடர்பு இறை செயலாய் எனக்கும் கிடைத்தது. அது "முந்து என் குலம் செய்தவம்" என்று எண்ணி மகிழ்ந்து இறைவனுக்கு நன்றி சொல்கிறேன்.

கண்ட நாள் முதலாய் காதல் பெருகி களிகூர்கிறது உள்ளம். அறிவே உருவாய் தோன்றி எந்த ஒருவிடயமானாலும் அதில் தன் தனிமுத்திரை பதித்து வியக்கத்தக்க வகையில் புதுமை செய்யும் அவரை எதிரிகூட உள்ளூர ரசிப்பான். கம்ப இராமாயணத்தை விருப்போடு பயின்று அதை எழுத்தறியா ஏழையும் இரசிக்கவல்ல முறையில் எளிமை ததும்ப எடுத்துரைத்து ஏற்றங்கண்ட இவர் இராமாயணத்தை வார்த்தைக்காய் இல்லாமல் வாழ்க்கையாய்க் கொண்டவர்.

இதையெல்லாம் எதற்கு எம்மோடு பகிர்ந்து கொள்கிறாய் என்று யாரேனும் எண்ணக் கூடும்! காரணமாய்த்தான் சொல்கிறேன்! தனது 23ம் வயதில் அகில இலங்கைக் கம்பன் கழகத்தை அமைத்து அதை மிகச் சிறப்பாய் இன்று வரை நடத்தி வரும் கம்பவாருதி, எம் போன்ற யாவர்க்குமே வழிகாட்டிதான். தன் குருநாதர் தமிழ்நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் இராதாகிருஸ்ணன் அவர்களின் மீது கொண்ட அபிமானத்தினால் அவரைத் தன் ஆன்மார்த்த குருவாகக் கொண்டு அவரைப் போன்று தன் நடையுடை பாவனைகளையும் ஆக்கிக் கொண்டவர்.

அவரைப் போன்று மிகச் சின்ன வயது முதல் குடுமி வைத்துக் கொண்டவர். எல்லாவற்றுக்கும் மேலாக தன்குருநாதர் மீது கொண்ட மதிப்பால் அவர் திருவடிப் பாதுகைகளை இரந்து பெற்று இதுவரை வணங்கி வருபவர். அத்தோடு இந்தியாவில் முதன்முதல் கம்பன் கழகம் என்ற அமைப்பை உருவாக்கிய பெரியவர் கம்பனடிப்பொடி சா. கணேஸன் அவர்களின் திருவடிப் பாதுகைகளையும் பணிந்து வேண்டி இன்றுவரை அதை தன் சுவாமி அறையில் வைத்துப் பூசித்து வருபவர்.


இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகரை தன் நேரடிக்குருவாய் அடைந்து நேர்த்தியாய் தமிழ் பயின்றவர் "அவர் போட்ட பிச்சை தான் என் தமிழ்" என்று உறுதியாய் சொல்லிக் கொள்ளும் இவர் எமக்கு எப்போதும் சொல்லுவார். "இந்தப் பெரியவர்களின் ஆசிகள் தான் என்னை வாழவைக்கிறது" என்றும் கூறுவார் கம்பவாரிதி அவர்கள். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் படித்தகாலத்து, சிவராமலிங்கம் ஆசிரியர், வித்துவான் ஆறுமுகம்தேவன், வித்துவான் சபாரட்ணம் ஆகியோரின் சிறந்த வழிகாட்டுதல்களை இன்றுவரை தன் நெஞ்சில் சுமக்கிறார்.

இந்த குருபக்தியே அவரின் இமாலயப் புகழ்கள் அத்தனைக்கும் காரணம். இன்றைய மாணவ சமூகம் ஆண்டுக்கொரு முறை ஆசிரியர் தினம் என்ற பெயரில் மேடைகளில் முழக்கம் செய்வதோடு ஆசிரியர்களுக்கான மரியாதையை மட்டுப்படுத்திக் கொள்கிறது. ஆசிரியர்கள் தமக்கெதிரான ஆதிக்க வர்க்கத்தினர் என்ற கற்பிதமே இன்றைய மாணவ சமூகத்தி டம் ஆழப்பதிந்திருக்கிறது.

ஆசிரியர்களைத் துணைக் கொண்டு படித்து பட்டம் பெறுகின்ற நிலை மாறி ஆசிரியர்க்கு பட்டம் சூட்டும் நிலை இன்று வளர்ந்துள்ளது.

(தொடர்ச்சி 31ம் பக்கம்.....)

# கவிதை ஊற்று



## திரும்பிச் செல்லும் காலம்

முகம் கூட காட்டாமல்
முகவரிகள் இல்லாமல்
தன் நகல்களைக் கொண்டே
அசல்களை ஆள முடிகிறது
எல்லாம் வல்ல
ஏகாதிபத்தியத்தால்..!

அவர்கள்
சென்று விட்டதாக
அறிவித்தார்கள்..!

அவர்களின் மொழி
நம்மை ஆட்சி செய்கிறது..!

அவர்களின்
உடை மட்டுமே
நமக்கு நாகரிகமானது..!

இறுதியில்
அவர்களின் மனமே
நமக்கு வாய்க்கப்பெற்றது..!

நிலத்தால்
ஆள வேண்டிய அவசியம்
அவர்களுக்கு இப்போது
நேரவில்லை..!

உயிர்களை அழிக்க..
உகை யுத்தம் கண்டுபிடித்த
இரசாயனங்களை எல்லாம்
நம் பயிர்களின் மீது தெளித்து
இப்போதும் அவர்கள்
படையெடுப்பை தொடர்கின்றனர்..!

விழித்துக் கொள்ள
வேண்டிய அவசியம்
நமக்கு இப்போதும்
நேரப்போவதில்லை..!
அவர்களின் கைகளால்
தயாரிக்கப்பட்ட மதுவே
நமக்கு போதையூட்டுகிறது..!

அவர்கள் தயாரித்த
தூக்க மாத்திரைகள்
விழுங்கிய பின்பே நாம்
உறங்கிப் போகிறோம்..!

அவர்களின்
மந்தையில் இருந்து
விலகிச் செல்ல
நாம் ஆடுகள் அல்ல..!
அவர்களால்
உருவாக்கப் பட்ட
குளோனிங் குழந்தைகள்..!

அவர்கள் உருவாக்கிய
வரலாற்றுப் பாதையில்
மிதமிஞ்சிய வேகத்தின்
விபத்துகள் நாம்..!

அவர்கள் அறிவித்த
முன்னேற்றம் என்பது
ஒரு வகை
அழிவின் சாட்சியம்..!

முறை தவறி
இடர்செய்யும்..
மூட மதங்களில் இருந்து
விழித்துக் கொண்டோம்
நம் இருப்பை
இல்லாமல் செய்யும்
அறிவியலின் கொடுங்கனவில்
அகப்பட்டுக் கொண்டோம்.!

ஒரு சிட்டுக்குருவியின்
மரணத்தின் வழியே
உயிரின் தொடர்ச்சியான
ஒரு கண்ணியை
தொலைத்துக் கொண்டிருக்கிறோம்..!

நதிகள் எப்போதும்
திரும்பிச் செல்வதில்லை..!
ஆனால் -
நாம் திரும்பிச்செல்லும்
காலம் வந்து விட்டது..!

முத்துக்களாய்
கொட்டிக்கிடக்கும்
நம் முன்னோர்களின்
வாழ்வின்
இரகசியங்கள் திறக்க
இயற்கைக்குள் திரும்புவோம்..!

நாம் புதைக்கப்பட இருக்கும்
பூமியின் கருப்பைக்குள்
இரசாயனங்கள் ஊற்றாமல்
பூக்கள் நிரம்பிய
ஆறுகளால்
ஈரப்படுத்துவோம்..!

நம்
வியர்வையின்
திசை பார்த்து
இப்புவியை நடத்துவோம்..!

நன்றி
-அமீர் அப்பாஸ்-

# முடி வெட்டிய ஒரு நாளில்

முடியைச் சரிசெய்து
இப்போதுதான்
வந்தேன்..
தொட்டுக்கொள்ள
எதுவும் இல்லை
என்று
மகள் சிணுங்கினாள்.

முத்தமிடும் பொழுதுகளில்
கோதிக் கொள்ளும்
சுவாரஸ்யம்
இனி
இல்லை
என்று மனைவி
காதில் கிசுகிசுத்தாள்.

முன்பு
ஊரில் அப்பாவும்
முடி வெட்டிக்கொள்
என்று
நச்சரித்தார்.

முடியுடன்
அழகாய் தெரிகிறீர்கள்
என்ற
அவளின்
கனவுகளும் கண்களில்
தெரிந்தன.

அம்மாவும்
வசதியாக
கோபப்படும் போது
முடியைப் பிடித்திழுத்து
ஓங்கி அறைவது
இப்போதும்
வலிக்கிறது.

இப்படிப் பரட்டையாய் வராதே
என்
கல்லூரி
அதிபரும் முழங்காலில்
நிற்கும் தண்டனையை
அந்
நாளில்
தந்ததை
முழங்காலும் மறக்காது.

புகைவண்டிப் பயணதில்
சன்னல்கரையோரம்
உட்கார்ந்தபடி
வெளியே தோழிகளுடன்
நடக்கும்
அவள்களை
பார்த்தபடி
முடியை சரிசெய்யும்
குதூகலம்
இப்போதும் இனிக்கிறது...

நண்பனுடன் சண்டையிடுகையிலும்,
அக்காளின்
கோபத்திற்காளாகும் போதும்
என் முடி தப்புவதில்லை...

இப்போது முடி
குறைந்துவிட்டது
பற்றி
எனக்கில்லாத
கவலை இவர்களுக்கெதற்கு?
முடி இல்லாமல்
வாழ்ந்து பார்
கவரிமான் தோற்றுப்போகும்...

-முல்லை அமுதன்

## சொற்கதம்பம் போட்டி இல: 12

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | 02 | |
| | 03 | 04 | | | 05 | 06 | |
| 05 | | | | 07 | | | |
| | | | | | | | |
| | | | 08 | | | | 09 |
| 10 | | | | | | | |
| | 11 | | | | | | |
| 12 | | | | 13 | | | |

### இடமிருந்து வலம்

1. பெண்கள் இடுப்பில் அணியும் நகை (6)
2. பருவ வயதில் முகத்தில் தோன்றுவது. (2)
4. காடு - வேறு சொல்.(3)
8. வேற்று நாட்டை உளவு பார்ப்பவன்.(4)
10. போலி நடிப்பு.(4)
11. புராதன காலத்தில் கல்வி கற்கும் முறை.(5)
12. கனி என்பதன் வேறொரு சொல் .(3)
13. நெஞ்சில் ஓர் ................ திரைப்படத்தின் பெயர் (4)

### மேலிருந்து கீழ்

1. நாட்டில் அமைதி நிலவவேண்டும் என்றால் சட்டம் - நன்றாக இருக்க வேண்டும்.(4)
3. உடல் வளர்ச்சிக்கு இந்தச் சத்து தேவை.(4)
4. செலவு என்பதன் எதிர்ப்பதம் (3)
5. போக்குவரத்து நெரிசல் ஏற்படும் சமயங்களில் வாகனங்களை .............. பாதையில் செலுத்துவர் (3)
6. கேரள மாநிலத்தின் நடனவகை.(4)
7. திருடன் என்பதன் இன்னொரு சொல்.(4)
9. கலசம் உள்ள ராசி.(4)
10. பொருட்கள் எரிந்து கிடைத்த வெண்தூள். (கடைசி எழுத்து இல்லை) (3)

### கீழிருந்து மேல்

9. மனிதனின் முதல் பருவம்(4)

**அனுப்ப வேண்டிய முகவரிகள்:**

| நோர்வேயில் | இலங்கையில் |
|---|---|
| SOTKATHAMPAM,<br>Maniosai<br>V/ThakshaniGurukulam,<br>Fossumkroken 7,<br>0982, Oslo, Norway. | சொறக்தம்பம்<br>மணி ஓசை<br>பாரதி இன்ஸ்ரிரியூட்<br>மீசாலை மேற்கு,<br>மீசாலை |

அனுப்புவர் பெயர்:.........................................................

விலாசம்:.........................................................

.........................................................

### சொற்கதம்பம் போட்டி இல: 11 விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 மி | ன் | 02 சா | ர | ம் | | | 03 ப | டை |
| ன் | | ந் | | | 04 நா | க | ம் | |
| 05 மி | ரு | த | ங் | 06 க | ம் | | | |
| னி | | ம் | | ங் | | 07 உ | ர | ம் |
| | 08 ம் | | 09 கு | க | ன் | | ம் | |
| 10 அ | ணி | ல் | | ண | | 11 ஆ | | 12 ம |
| | மே | | 13 அ | ம் | பி | கா | ப | தி |
| | 14 க | ட் | டை | | | ர | | ய |
| 15 பா | லை | | | 16 ஆ | ர | ம் | ப | ம் |

சொற்கதம்பம் 12 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் திகதி மாசி 25 ஆகும். வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மறு இதழில் பிரசுர மாகும். போட்டியில் பங்குபற்றுகின்ற வாசகர்கள் சொற் கதம்பத்தைப் பூர்த்திசெய்து புள்ளிக் காட்டில் வெட்டி அனுப்பிவைக்கவும்.

முதலாவது பரிசு -ரூபா 1000
இரண்டாவது பரிசு -ரூபா 750
மூன்றாவது பரிசு -ரூபா 500

பலர் விடைகளைச் சரியாக எழுதியனுப்பும் பட்சத்தில் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

### சொற்கதம்பம்-போட்டி இல: 11

**பரிசு பெறுபவர்கள்**

1ம் பரிசு-என்.சாருஜன், வரணி, இயற்றாளை
2ம் பரிசு-கலைச்செல்வன் பிருந்தன், எம்.எஸ் லேன், கோண்டாவில் கிழக்கு
3ம் பரிசு-சி.வனிதா கென்ஸ்மன் வீதி, சாவகச்சேரி

**பாராட்டுப் பெறுபவர்கள்**

1) எஸ். நளினி - தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலி
2) சி.சங்கவி - கென்ஸ்மன் வீதி, சாவகச்சேரி
3) ச.சுலக்சனா - எம்.எஸ் வீதி, கோண்டாவில் கிழக்கு
4) க.மதுராகரன் - 88, உசன், மிருசுவில்
5) லு.அபிஷான் - எம்.எஸ் வீதி, கோண்டாவில் கிழக்கு



# ஜோக்ஸ்

☹ அடுத்தவருக்கு உதவி செய்ததால் சிறையில தூக்கி போட்டுட்டார்கள்
✱ என்ன உதவி செய்தாய்?
☹ பொருட்களை மூட்டை கட்ட இரண்டு சாக்கு கொடுத்தேன், அவ்வளவுதான்.
✱ அதுக்கு ஏன் சிறையில் போட்டார்கள்?
☹ நான் சாக்கு கொடுத்தது பக்கத்து வீட்டில் திருடிய திருடனுகல்லவா...!



☹ பொம்பிளையள் ரி.வி சீரியலைப்பார்த்துதானே அழுவார்கள்... உங்கட மனைவி ரி.வியில நியூஸை பார்த்து அழுறாவே.....

✱ நியூஸ் வாசிக்கின்ற பொம்பிளை கட்டியிருக்கிற அதேமாதிரி சேலை வேணுமாம்.



✱ நீதானே நடிகை நமீதாவுக்கு உடுப்பு தைக்கிற தையல்காரன்?
☹ ஓம், ஏன் சேர் கேட்கிறீங்கள்?
✱ விபத்து ஏற்பட காரணமாக இருந்ததற்காக உன்னைக் கைது செய்கிறேன்!



☹ என்னப்பா எங்கடை கல்யாண நாளுக்கு சிக்கன் பிரியாணி செய்யட்டுமா?
☆ எப்பவோ நடந்த தப்புக்கு இண்டைக்கு ஏன் கோழியைக் கொல்லவேணுமா?



04

# மர்மதேசம்

தமிழில் தருவது ஹரி

ஸ்பாட்டா நாட்டு அரசனுக்கு நான்கு பிள்ளைகள் இருந்தனர். இவர்களில் இளையவளான ஹெலன் உலகிலேயே மிகவும் அழகியாக திகழ்ந்தாள். அவளுக்கு சுயம்வரம் நடத்திய போது அவள் மெனலஸ் என்ற மைசினியே நாட்டு இளவரசனை தேர்ந்தெடுத்தாள். மெனலஸும் ஹெலனும் ஸ்பாட்டா நாட்டை ஆட்சி செய்துகொண்டிருந்த போது ட்ரோய் நாட்டு இளவரசன், பரிஸ் தனது நண்பர்களுடன் அந்த நாட்டை வந்தடைந்தான். தேவதைகளுக்கிடையில் நடைபெற்ற அழகுப்போட்டியில் நடுவராக இருந்த அவன் அழகுக்கடவுளான அப்ரோடைட்டை மிகவும் அழகானவள் எனத்தீர்ப்பளித்தான். ஆகவே அப்ரோடைட் உலகிலேயே மிகவும் அழகான பெண்ணை அவனுக்கு தருவதாக வாக்களித்திருந்தாள். அவளைத் தேடி பல நாடுகளுக்கு சென்ற பரிஸ் இறுதியில் ஸ்பாட்டா நாட்டை வந்தடைந்தான். அக்காலத்தில் மிகவும் பலம் வாய்ந்த அரசான ட்ரோய் நாட்டு இளவரன் தங்கள் நாட்டுக்கு வந்ததையறிந்த மெனலஸ் அவனை வரவேற்று தனது அரண்மனையில் விருந்தளித்தான். அங்கு ஹெலனைக் பரிஸ் அவளே அப்ரோடைட் சொன்ன அழகி எனத் தீர்மானித்தான். மெனலஸ் இல்லாத நேரம் ஹெலனையும் ஸ்பாட்டா நாட்டிலிருந்த பெருந்தொகையான செல்வத்தையும் எடுத்துக்கொண்டு ட்ரோய் நாட்டை வந்தடைந்தான். தான் இல்லாத நேரம் தனது மனைவி கடத்தப்பட்டதை அறிந்த மெனலஸ் தனது சகோதரனுடனும் வேறு பல கிரேக்க அரசர்களுடனும் அவர்களது பெருந்தொகையான படைகளுடனும் ட்ரோய் நாட்டை வந்தடைந்தான். இனி...


ஏனெனின் கிரேக்க வீரர்களிலேயே ஒடிசீயஸ் தான் மிகவும் புத்திசாலி. மெனலஸும் ஒடிசீயஸும் ட்ரோய்க்கு போனபோது பிரையம் அவர்களை வரவேற்றான். அவனும் ஏனையவர்களும் ஹெலனை திரும்ப ஒப்படைக்க தயாராயிருந்தார்கள். எனினும் பரிஸ் ஹெலனை ஒப்படைக்க மறுத்தான். மெனலஸ் தனது மனைவியை திரும்ப தரும்படி கெஞ்சிக்கேட்டான். ஒடிசீயஸ் மிகவும் புத்திசாலித்தனமாகவும் மென்மையாகவும் ட்ரோய் நகர



மன்னனிடம் கேட்டான். எனினும் பரிஸும் அவனுடன் ஸ்பாட்டாவுக்கு வந்து ஹெலனை கடத்தியவர்களும் இவர்கள் மீது கோபப்பட்டு இவர்களை கொலை செய்ய முயன்றார்கள். எனினும் பெரியவர்கள் தடுத்ததால் அவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

எல்லா நம்பிக்கையையும் கைவிட்டு மெனலஸும் ஒடிசீயஸும் ரெனெடோஸுக்கு வந்தார்கள். அவர்கள் இறுதியில் போர் செய்வது என தீர்மானித்தார்கள். இதேவேளை ட்ரோஜன்கள் சும்மா இருக்கவில்லை. தங்களுக்கு எதிராக மிகப்பெரிய படை வந்திருப்பதை அறிந்த அவர்கள் தங்களுடைய அயல் நாடுகளிடம் உதவி கோரினார்கள். மிகப்பெரிய வீரனான பிரையமின் மூத்தமகன் ஹெக்ரர், அழகுக்கடவுளான அப்ரோடைட்டுக்கும் அன்சீசஸ் என்ற அரசனுக்கும் பிறந்த ஏனீயஸ், கடல் கடவுளான பொசீடனுக்குப் பிறந்த இராட்சத உருவம் கொண்ட சைக்னஸ் என மிகப்பெரிய வீரர்கள் ட்ரோஜன் படையில் இருந்தார்கள். வட துருவத்திலிருந்து தென் துருவம் வரை உள்ள போர் வீரர்கள் பலர் ட்ரோஜன் நகருக்கு வந்தார்கள். கடவுள்களின் தலைவரான ஸியுஸின் மகனான ஸர்படோன் தலைமையில் லைசியன் அணிவகுத்து வந்தார்கள். மேலும் பல தூதர்கள் பல நாடுகளுக்கு உதவி கோரி சென்றனர்.

கிரேக்க வீரர்கள் ட்ரோய் நகரில் வந்திறங்கிய போது ட்ரோஜன்கள் அவர்களை எதிர் கொள்ள மிகப் பெரிய படையுடன் காத்திருந்தனர். கிரேக்கர்கள் வந்திறங்கிய உடனேயே மிகப்பெரிய பயங்கரமான சண்டை தொடங்கியது. ஹெக்டரும் சைக்னஸும் தங்களின் எதிரே வந்த கிரேக்க வீரர்களின் தலைகளை வாழை மரத்தை வெட்டுவது போல வெட்டித்தள்ளினர். அதே வேளை அக்கிலீஸ் ட்ரோஜன் படைக்குள் புகுந்து மிகப் பெரிய சேதத்தை அவர்களுக்கு ஏற்படுத்தி சைக்னஸை நெருங்கி அவனைத் தாக்கினான். அக்கிலீஸுக்கும் சைக்னஸுக்கும் இடையே கடுமையான சண்டை தொடங்கியது. அக்கிலீஸ் தனது ஈட்டியால் பலமுறை சைக்னஸை தாக்கினான். ஆனால் அவனது உடலில் ஒரு காயமும் ஏற்படவில்லை, ஒரு துளி இரத்தமும் சிந்தவில்லை. ஏனெனில் சைக்னஸ் கடல் கடவுளான பொசீடனுடைய மகன். மேலும் அவனுக்கு மனிதனால் செய்யப்



பட்ட எந்த ஆயுதத்தாலும் காயமோ இறப்போ ஏற்படாத வண்ணம் பொசீடனால் பாதுகாக்கப்பட்டிருந்தான். அக்கிலீஸ் பலமுறை தாக்கியும் சைக்னீஸுக்கு காயம் ஏற்படாது போக, அக்கிலீஸ் கோபத்தில் தன்னை மறந்தான். அவன் தனது கையிலிருந்த ஈட்டியையும் வாளையும் தூக்கி எறிந்தான். அவன் வெறும் கைகளால் அந்த இராட்சத மனிதனைத் தாக்கினான். அவன் சைக்னஸின் முகக் கவசத்தை தனது கைகளால் கிழித்து எறிந்தான். சைக்னஸின் தொண்டையை தனது கையால் கிழித்து அவனைக் கொன்றான்.

ஆனால் கடல் கடவுளான பொசீடன் தனது மகனை கண்காணித்து வந்தான். சைக்னஸை கொன்ற அக்கிலீஸ் தனது தேரைக் கொண்டுவந்து சைக்னஸை அதில் ஏத்த நினைத்தான். அவன் தனது தேரை கொண்டுவந்தபோது சைக்னஸின் வாள் மட்டும் நிலத்தில் கிடக்கக் கண்டான். சைக்னஸை காணவில்லை. ஒரு இராட்சத அன்னப் பறவை வானத்தில் பறந்து சென்றதை மட்டுமே அவனால் காணமுடிந்தது. அதனாலேயே இன்றும் கிரேக்கர்கள் அன்னத்தை சைக்னஸ் என்று அழைக்கின்றார்கள்.

இராட்சத உருவம் கொண்டவனும் கடவுளின் மகனுமான சைக்னஸை தனது வெறும் கைகளாலேயே கொன்ற அக்கிலீஸின் வீரமும் கொடூரமும் நிறைந்த இந்தச் செயலால் யுத்த களத்திலிருந்த ட்ரோஜன்கள் மிகவும் திகில் கொண்டார்கள். அவர்கள் அதன்பின் ட்ரோய் நகரத்து மதிலைத் தாண்டி வரவோ, வெட்ட வெளியில் யுத்தம் செய்யவோ துணியவில்லை. கிரேக்க படைகளின் கப்பல்களையும், படை முகாம்களையும் சுத்தி மிகப்பெரிய பள்ளம் ஒன்றை தோண்டும்படியும் ஐந்து கதவுகளைக்கொண்ட மிகப்பெரிய சுவரைக் கட்டுமாறும் ஒடிசீயஸினால் கிரேக்கருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அதே நேரம் கிரேக்கர்கள் ட்ரோய் நாட்டிலிருந்த ஏனைய நகரங்களை தாக்கி சூறையாடத் தொடங்கினார்கள். அக்கிலீஸ் லைர்னெஸஸ் நாட்டை தாக்கி கைப்பற்றினான். அங்கே பிரீஸியஸ் என்ற அழகான பெண்ணை அவன் மணந்து கொண்டான். அதேநேரம் அஹமெனானும் வேறோரு நகரத்தை கைப்பற்றி சூரியக் கடவுளான அப்பொலோவுக்கு பூசை செய்யும் ச்ரைஸஸ் என்பவனது அழகான மகளை கைப்பற்றினான். இதைக் கேள்விப்பட்ட ச்ரைஸஸ் மிகவும் கவலைப்பட்டு அஹமெனானிடம் வந்து தன்னிடம் இருக்கும் எல்லா சொத்தையும் தருவதாகவும் பதிலுக்கு தனது மகளை தன்னிடம் தந்துவிடும்படியும் கேட்டான். ஆனால் அஹமெனான் அந்தப் பெண்ணை விடுதலை செய்வதை விரும்பவில்லை. மேலும் அவன் கோபமடைந்து ச்ரைஸஸை திட்டி உடனே கிரேக்கர்களது முகாமை விட்டு வெளியேறுமாறு கட்டளையிட்டான். தன்னால் ஒன்றும் செய்யமுடியாத ச்ரைஸஸ் அழுது சொர்க்கத்தை நோக்கி தனது கைகளை தூக்கி தனக்கு உதவி செய்யுமாறு அப்பொலோவை நோக்கி பிரார்த்தனை செய்தான். அவனது பிரார்த்தனையைக் கேட்ட அப்பொலோ மிகப்பெரிய நோயை கிரேக்க படை முகாமுக்கு அனுப்பினான். இந்த நோயால் ஒவ்வொரு நாளும் கிரேக்க படையினது குதிரைகளும், அவர்கள் உணவுக்காக கொண்டுவந்த கால்நடைகளும் இறந்தன. ஒன்பது நாட்கள் இது தொடர்ந்து நடந்தது. பத்தாவது நாள் கிரேக்க படைகளை ஒன்று கூட்டிய அக்கிலீஸ் இதற்கு என்ன செய்யலாம் என்று அவர்களைப் பார்த்து கேட்டான். கல்சாஸ் என்ற ஒரு சாமியார் எழுந்து "நீ என்னை காப்பாற்றுவாய் என்று உறுதியளித்தால் நான் உனக்கு, இந்த நோய் அப்பொலோவின் கோபத்தால் ஏற்பட்ட நோய் என்றும், ஏன் அப்பொலோ கோபப்பட்டான் என்றும் சொல்லுவேன். ஏனென்றால் நான் அந்தக் காரணத்தைச் சொன்னால் இங்குள்ள எமது கிரேக்க அரசர்களில் ஒருவர் கோபப்படுவார்" என்றான்.

அக்கிலீஸ் உறுதியளித்ததால் ஒருவரும் கல்சாஸுக்கு தீங்கு செய்ய முயலவில்லை. "அஹமெனான் ச்ரைஸஸிடம் கொடூரமாக நடந்து கொண்டதால் எங்கள் மீது கோபப்பட்ட அப்பொலோ இந்த நோயை எங்கள் மீது அனுப்பியுள்ளார். அவர் எங்களை மன்னிக்க வேண்டும் என்றால் நாங்கள் ச்ரைஸஸின் மகளை அவனிடம் ஒப்படைக்க வேண்டும். மேலும் இந்த பாவத்தை போக்குவதற்கு நூறு மாடுகளையும் பலிகொடுக்க வேண்டும். இதன் மூலமே நாங்கள் அப்பொலோவின் கோபத்திலிருந்து தப்ப முடியும்" என்று கல்சாஸ் அக்கிலிஸுக்கு சொன்னான்.

(தொடரும்...)




சுசீலா நந்தகோபன்,
போதனாவைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

# மூலநோய் போக்கும் மூலிகை
## -துத்திக் கீரை-

ஆசனவாயின் உட்பகுதியிலுள்ள சிரைகள் வீங்கிப்புருத்து வெளிவருவதைத்தான் மூலநோய் என்கி றார்கள்.

மூலதாரம் சூடு ஏறி மலபந்தமாகும்போது, மலம் வெளியேறாமல் உள்ளுக்குள்ளேயே நின்று இறுக்கு கிறது. முக்கி வெளியேற்ற முற்படும்போது மலவாய்க் குடலில் இருந்து சிரைகள் பாதிக்கப்பட்டு வெளியே தள்ளிக்கொண்டு வந்து விடுகின்றன.

தவிர, காய்ந்த மலம் ஆசனவாயைக் கிழிப்பதால் ரத்தம் பீறிட்டு வெளியே வரும். ஒவ்வொரு நாளும் இதே மாதிரி மலம் கழிக்கும்போது அந்த வாய், பிளந்து கொள்ளும். இதை பிஸ்ஸர் அல்லது ஆசனவாய் வெடிப்பு என்கிறார்கள்.



இது புண்ணாகி நாளடைவில் சீழ் மூலம் அல்லது பவுத்திரமாக மாறும். இவ்வாறே நவ மூலங்கள் உண்டாகின்றன.

ஆங்கில வைத்தியத்தில் இதை முதல் டிகிரி, இரண்டாவது டிகிரி, மூன்றாவது மற்றும் நான்காவது டிகிரி என நான்கு வகைகளாகப் பிரிப்பார்கள். ஆனால் நமது தமிழ் முன்னோர்கள் இதை இருபத்தோரு வகைகளாகப் பிரித்தார்கள்.

அவை:நீர் மூலம், செண்டு மூலம், முளை மூலம், சிற்று மூலம், வரள் மூலம், ரத்த மூலம், வினைமூலம், மேக மூலம், பௌத்திர மூலம், கிரந்திமூலம், சூத மூலம், புற மூலம், சீழ் மூலம், ஆழி மூலம், தமரக மூலம், வாத மூலம், பித்த மூலம், சிலேத்தும மூலம், தொந்த மூலம் மற்றும் கவ்வு மூலம்.

இதில் ஒன்பது வகைகள் மிகக் கடுமையானவை என்பதால் இவற்றை நவமூலம் என்றும் சொன்னார்கள்.

நமது மூதாதையரான சித்தர்கள் மூல நோயை குணப்படுத்தும் பல அரிய மூலிகைகளை ஓலைச் சுவடிகளில் விட்டுச் சென்றுள்ளார்கள்.

அதனடிப்படையில் மூலநோய்க்கு பிரத்தியேகமான மூலிகை மருந்துகள் தயாரிக்கப்பட்டு அளிக்கும்போது பக்க விளைவுகள் இல்லாமல் மூலநோய் குணமாகும்.

ஒரு மண்டலம் சாப்பிடும் மருந்துகளும் உள்ளன. ஒரே வாரத்தில் குணமாகும் மருந்துகளும் சித்த மருத்துவத்தில் சொல்லப்பட்டுள்ளன.

இதனால் உள் மூலம் குணமாகும், வெளிமூலம் சுருங்குகிறது. ஆசனவாயில் இருக்கும் சீழ்க்கட்டிகள் உடைந்து ஆற்றப்படுகின்றன. மல ஜலம் சுலபமான முறையில் வெளியேறுகிறது. மீண்டும் வருவதில்லை.

உதாரணத்திற்கு ஒரு மூலிகையைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்.

துத்திக் கீரை என்ற ஒன்றை கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்த துத்திக் கீரையை தினந்தோறும் சமையலில் சாப்பிட்டு வந்தால் மூலநோய் தலை காட்டாது. எத்தகைய மூலக்கட்டிகள் வந்தாலும் துத்தி இலைமீது விளக் கெண்ணெய் தடவி, அனலில் காட்டி மூலக்கட்டியின் மீது வைத்துக் கட்டிவிட, கட்டி உடைந்துவிடும். மூல முளை கள் உள்ளுக்குச் சென்றுவிடும். வேண்டுமானால் நீங்கள் கூட செய்து பார்க்கலாம்.

### துத்திக்கீரையின் பிற பயன்கள்:

இதன் இலை, பூ, வேர், பட்டை என அனைத்துப் பகுதிகளும் மருத்துவக் குணம் கொண்டவை.

"மூலநோய் கட்டி முளைபுமுப் புண்ணும்போகுஞ்
சாலவதக் கிக்கட்டத் தையலே மேலுமதை
எப்படியேனும் புகிச்ச எப்பிணியும் சாந்தமுறும்
இப்படியிற் றுத்தி யிலையை"

(அகத்தியர் குணபாடம்)

### மலச்சிக்கல் தீர

மலச்சிக்கல் உடல் ஆரோக்கியத்திற்கு முதல் கேடாகும். மலச்சிக்கலை நீக்கினால் நோயின்றி நூறாண்டு வாழலாம். இன்றைய நவீன உணவுகள் எளிதில் ஜீரணமாவதில்லை, மேலும் அவசரமாக உணவை சாப்பிடுவதாலும் மலச்சிக்கல் உருவாகின்றது. மனச் சிக்கல் இருந்தால் கூடவே மலச்சிக்கல் வந்துவிடும்.

மலச்சிக்கல் உள்ளவர்கள் துத்திக் கீரையை நன்கு சுத்தமாகக் கழுவி,அதனுடன் பாசிப்பருப்பு சேர்த்து சமைத்து சாதத்துடன் கலந்து சிறிது நெய்சேர்த்து சாப்பிட்டு வந்தால் மலச் சிக்கல் தீரும்.

### மூல வியாதி குணமாக

காரமும்,புளிப்பும் உணவில் அதிகம் சேர்ப்பதால் சிலருக்கு குடலில் ஒவ்வாமை ஏற்பட்டு வாய்வுக்கள் சீற்றமாகி மூலக் குடலை அடைக்கிறது. இதனால் மூலத்தில் புண் ஏற்பட்டு மூலநோயாக மாறுகிறது.

இவ்வாறு மூல நோயால் அவதிப்படுபவர்கள் துத்திக் கீரையை நீர்விட்டு அலசி சிறிது சிறிதாக நறுக்கி அதனுடன் பாசிப்பருப்பு, பூண்டு, சின்ன வெங்காயம் சேர்த்து நெய்விட்டு கடைந்து வாரம் இருமுறை மதிய உணவுக்குப்பின் சாப்பிட்டு வந்தால் மூலநோயால் ஏற்படும் பாதிப்புகள் குறைந்து மூலநோய் படிப்படியாகக் குணமாகும்.

### உடல் சூடு தணிய

துத்திக் கீரையை நன்கு நீரில் அலசி சிறியதாக நறுக்கி நீரில் கொதிக்க வைக்க வேண்டும். நன்கு கொதித்த பின் அதனுடன் சின்ன வெங்காயம், பூண்டு, மிளகு, தேவையான அளவு உப்பு சேர்த்து இரசமாக அருந்தி வந்தால் உடல் சூடு தணியும்.

### வெப்பக்கட்டி குணமாக

துத்தியிலையை எடுத்து ஆமணக்கு (விளக்கெண்ணெய்) எண்ணெய் தடவி வதக்கி வெப்பக் கட்டிகளின் மேல் வைத்து கட்டி வந்தால் கட்டிகள் பழுத்து உடைந்து ஆறும்.

துத்தியிலையை சாறெடுத்து, பச்சரிசி மாவுடன் சேர்த்து களியாகக் கிண்டி கட்டிகளின் மேல் பூசி வந்தால் கட்டிகள் வெகு விரைவில் குணமாகும்.

### பல்ஈறு நோய் குணமாக

துத்தி இலையை நீரில் போட்டு கொதிக்க வைத்து, அந்த நீரில் வாய் கொப்பளித்து வந்தால் பல் ஈறுகளில் ஏற்படும் நோய்கள் தீரும்.

---

(23ம் பக்கத் தொடர்ச்சி)

தொலைக் காட்சிகள், திரைப்படங்கள் என்பவற்றின் தாக்கத்தால் இளைஞர்களின் நடத்தையே மாறிப்போய் விட்டது ஆசிரியர்களை சமதையாக எண்ணி நண்பர்களோடு உரையாடுவதைப் போல மதிப்பற்ற முறையில் நடந்து கொள்ளும் பரிதாபம் மறையவேண்டும் இப்படியெல்லாம் சொல்லுவதைக் கொண்டு "நீ எதுவும் தவறிழைத்ததில்லையா ? நீ படிக்கும் காலத்தில் செய்த குழப்படிகள் எமக்குத் தெரியாதா ? என்று நீங்கள் எண்ணக் கூடும்" உண்மை! நான் தவறிழைத்திருக்கிறேன். ஆதலாற்றான் அவற்றின் பாதிப்பை புரிந்து கொண்ட தாற்றான் சொல்கிறேன். அதுமட்டுமல்ல, இன்றும் சிலர் உள்ளத்தில் நான் குழப்படிகாரனாகவே குடிகொண்டிருக்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் உண்மை நான் எந்தக் காலத்திலும் குரு நிந்தனை புரிந்ததில்லை! நான் மலையாக நம்பும் ஒரு விடயத்தை இங்கு சொல்கிறேன்.

குருவினுடைய ஆசி ஒருவனுக்கு முழுதுறக் கிடைக்குமானால் அவன் நிச்சயமாக வாழ்வில் உயர்வான். குருவை மதிக்கத்தவறியவன் எத்துணை ஆற்றல் நிறையப் பெற்றிருப்பினும் அவன் வாழ்வில் உயர்வுறுவது முடியாத காரியம் ஆசிரியர்களை ஆண்டுக்கொரு முறை மேடையில் போற்றும் நகைப்பிற்கிடமான செய்கையை கைவிட்டு உண்மையாய் உணர்வாய் போற்றுதலை கண்ணியமாய்க் கொள்ள வேணடும். இறைவனை வணங்குமுன் குருவை வணங்கி வாழ்வில் உயர வழிகாண்போம். என் குருநாதர், தன் குருமார்களின் மீது கொண்டுள்ள பக்தியும் விசுவாசமும் மரியாதையும் இன்றைய சமூகத்திற்கு மிகச்சிறந்த ஒருபாடமாக அமையும் என்ற நோக்கிலேயே இதனை அசைபோடுகிறேன். அவர் தமிழைப் பேணுவதில் கொண்டிருக்கும் ஆர்வம் எனக்குள் தமிழ்ப்பற்றை உண்டு பண்ணுகிறது. தமிழை நேசிக்க வேண்டும், தமிழ்ப் புலவர் களை நேசிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை என்போன்றோர்க்குள்ளே விதைத்துக் கொள்கிறது.

"தேமதுரத் தமிழோசை தெருவெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதி வாக்கை இன்று முழுதுறப் பின்பற்றுகின்ற ஒருவராய் நான் என் ஆசானைப் பார்க்கின்றேன். "சாகிற் தமிழ்படித்துச் சாகவேண்டும்" என்ற பக்திவைராக்கியத்தை எமக்குள்ளே துாண்ட வல்ல நல்லாசானை நாளெல்லாம் போற்றிப் பின்பற்றி தமிழ்பயில விழைகிறேன். என் குருநாதர் குருமார்மீது கொண்ட பக்தியை உணர்ந்து நாமும் குருபக்தி மிக்கவர்களாய் நடப்போம். ஆசிரியர்கள் எது செய்தாலும் அது மாணவர்களின் நன்மைக்கான நடவடிக்கைகள் தான் என்பதை புரிந்துகொண்டு நடக்க முயல்வோம்.

(12ம் பக்கத் தொடர்ச்சி)

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வட
-சொல்லென்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே"
(தொல்.சொல் 397)

ஆனால் தொல்காப்பியத்துக்கு உரை வகுத்த உரையாசிரியர் பலரும் தொல்காப்பியச் சூத்திரக் குறிப்புக்களை ஆதார சுரதியாக்கிச் சொல் என்றால் என்ன என்பதற்கு வரைவிலக்கணம் வகுப்பர். இதனை,

✦ "சொல்லென்பது எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவிக்கும் ஓசை."
- இளம் பூரணர்

✦ "சொல்லாவது எழுத்தொடு ஒரு புடையாண் ஒற்றுமையுடைத்தாய்ப் பொருள் குறித்து வருவது."
-சேனாவரயைர்.

✦ "சொல் என்பது எழுத்தினால் ஆக்கப்பட்டு இருதிணைப் பொருட்டன்மையும் ஒருவன் உணர்தற்குக் கருவியாம் ஓசை."
- நச்சினார்க்கினியர்

✦ "கிளவியெனினும் மாற்றமெனினும் மொழியெனினும் இவையெல்லாம் எழுத்தொடு புணர்ந்து பொருளறிவிக்கும் ஓசைமேல் நிற்கும்."
- கல்லாடனார்

என்று முனைவர். க.ச.அகத்தியலிங்கம் அவர்கள் தொல்காப்பியத்தின் தோற்றமும் ஏற்றமும் என்ற கட்டுரையில் சுட்டிக்காட்டுவர்.

ஆனால் இதன் பின் வந்த பவணந்தி முனிவரின் நன்னூல் என்ற இலக்கணநூல் சொல் பற்றிய தெளிவான விளக்கம் பலவற்றைத் தருகின்றது. அதாவது தொல்காப்பியர் குறிப்பிடாத இயலான "பதவியல்" என்பதை அமைத்துச் சொல் பற்றிய அறிமுகத்தை எழுத்திகாரத்திள்ளேயே தொடங்கிவிடுகிறது. அதன் முதற்சூத்திரத்தில்

எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற்
பதமா மதுபாகப் பதம்பகு பதமென
இருபாலாகி யியலு மென்ப (நன் 128)

என சொல்லுக்கு வரைவிலக்கணம் வகுத்துவிடுகிறது.

தொல்காப்பியம், நன்னூல் ஆகிய முக்கிய இரு இலக்கண நூல்களையும் துணைகொண்டு, காலச் செல்நெறிகளைத் தம்மனத் திருத்திய புலமையுடன், பல நூற்றுக் கணக்கானோர் சொல் என்றால் என்ன? என்பதற்கு விளக்கமளித்துள்ளனர். அவற்றுள் சில வருமாறு

✦ "சொல்லாவது ஒருவர் தங்கருத்தின் நிகழ் பொருளைப் பிறர்க்கு அறிவித்தற்கும், பிறர் கருத்தின் நிகழ்பொருளைத் தாம் அறிவதற்குங் கருவியாகிய ஒலியாம்."
-ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் - இலக்கணச் சுருக்கம் -(சூத் 173)

✦ "எழுத்துத் தனித்து நின்றும் ஒன்றுக்கு அதிகமான எழுத்துக்களைத் தொடர்ச்சியாகப் பெற்றும் பொருள் தருமாயின் அது "சொல்" எனப்படும்."
-வித்துவான் க.சொக்கலிங்கம் - இலக்கணத் தெளிவு முதற்பதிப்பு 1981 (பக்22)

✦ "சொல்லாவது முற்கூறிய எழுத்தினான் ஆக் கப்பட்டு இருதிணைப் பொருட்டன்மையும் ஒருவர் உணர்ந்து கொள்வதற்குக் கருவியா கிய ஓசையாம்."
- வித்துவான் க.வெள்ளைவாரணன், தமிழ் இலக்கிய வரலாறு தொல்காப்பியம். அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு 1957 (பக் 32)


✦ "ஓர் எழுத்தால் அல்லது இரண்டு முதலிய எழுத்துக்களாற் பொருத்தமுற அமைக்கப் பட்டு தம்கருத்தை பிறர்க்கு அறிவித்தற்கும் பிறர் கருத்தைத் தாம் அறிதற்கும் கருவியாய் அமைவது."
- பண்டிதர் சு.வேலுப்பிள்ளை அடிப்படை இலக்கணம், நான்காம் பதிப்பு 1993 பக்13

✦ "தனி ஓர் எழுத்தினால் அல்லது பல எழுத்தால் அல்லது பல எழுத்துக்களினால் ஆகிப்பொருள் தந்து அர்த்தத்தின் குறியீடாக நிற்பது சொல் அல்லது பதம் எனப்படும்."
- பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம், தமிழ் இலக்கணப் பூங்கா. நான்காம் பதிப்பு (பக் 18)


✦ "எழுத்துக்கள் ஒன்றோ பலவோ சேர்ந்து பொருள் தருமாயின் அதனைச் சொல் என்பர். சொல் என்பதும் பதம் என்பதும் ஒரே பொருள் தரும் சொற்களாம்."
-எம்.ஏ. நுஃமான் அடிப்படைத் தமிழ் இலக்கணம், மீள்பதிப்பு ஜூன் 2007 (பக் 31)

ஆக, எழுத்தின் வழி பொருளூற்றுக் கருத்தூட்டத்திற்குக் காரணமாயமைந்து மொழியைச் செம்மை செய்து நிற்பது சொல்லெனக் கொள்ளலாம்.

# சின்னக் கரங்களின்
# வண்ணப் படைப்புகள்



அ.தனுஷன்
தரம் 05, யா/கச்சாய் அ.த.க. பாடசாலை




சு.பிரதீப்
தரம் 04, யா/மீசாலை விக்னேஸ்வர மகா வித்தியாலயம்




கு.சர்விகன்
தரம் 02, யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க வித்தியாலயம்.




க.கஜோன்
தரம் 11, யா/மீசாலை விக்னேஸ்வர மகா வித்தியாலயம்



A.தயானி
தரம் 09, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி



கி.ரிஷிவைஷ்ணா
தரம் 03, யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை

# அறிவியல்


## அலெக்சாந்திரியாவின் கலங்கரை விளக்கம்



அலெக்சாந்திரியாவின் கலங்கரை விளக்கம் கி.மு மூன்றாம் நூற்றாண்டில் (285க்கும் 247க்கும் இடைப்பட்ட காலத்தில்) எகிப்தின் அலெக்சாந்திரியாவின் பாரோஸ் தீவில் துறைமுகத்தை அடையாளம் காணும் விதமாகக் கட்டப்பட்ட கோபுரமாகும். பின்னர் இது கலங்கரை விளக்க மாகவும் செயல்பட்டது.

115 தொடக்கம் 135 மீற்றர் வரை மதிப்பிடப்படும் இதன் உயரம் அந்நாளைய உலகின் மூன்றாவது (பிரமிட்கள் குஃபு மற்றும் காஃபரா அடுத்து) உயரமான கட்டிடமாகக் கருதப்படுகிறது. பழங்கால உலகின் ஏழு அதிசயங்களில் இதுவும் ஒன்றாகும். இந்தக் கலங்கரை விளக்கம் கி.பி. 956,1303 மற்றும் 1323 ஆண்டுகளின் நிலநடுக்கங்களின் போது அழிவடைந்தது. 1480ஆம் ஆண்டு அழிவின் பின்னர் கட்டிடத்தின் கற்களைக் கொண்டு அங்கு ஓர் கோட்டை எழுப்பப் பட்டதால் பழமையான கட்டிடத்தின் இடிபாடுகள் முழுமையாக அழிந்தன. 1994 இல் பிரான்சு தொல்பொருள் ஆய்வாளர்கள் அலெக்சாந்திரியாவின் கிழக்குத் துறைமுக நிலத்தில் சில எச்சங்களைக் கண்டுபிடித்தனர்.


## செவ்வாய்க்கு மனிதர்களை ஏற்றிச்செல்லும் விண்கலம்



செவ்வாய்க் கிரகத்திற்கு மனிதர்களை ஏற்றிச்செல்லும் வகையில் அதிக எடையைத் தாங்கிச் செல்லும் புதிய விண்கலம் ஒன்றை நாசா வடிவமைத் துள்ளது. இந்த விண்கலம் 384 அடி நீளம் கொண்ட தாகவும், 6.5 மில்லியன் பவுண்ட் எடை கொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இது விண்வெளிக்கு 130 தொன் எடையுள்ள பொருட்களைத் தாங்கிச்செல்லும் என நம்பப் படுகிறது.

சந்திரனுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தைத் தொடர்ந்து செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பும் வேலைகளைத் தொடங்கியுள்ளது நாசா. மனிதர்களை சுமந்து செல்லும் வகையில் அதிக எடையைத் தாங்கும் வகையில் இந்தப் புதிய விண்கலம் தயார் செய்யப் பட்டுள்ளது. இந்தப் புதிய விண்கலத்திற்கான சோதனை ஓட்டம் வரும் 2017ம் ஆண்டில் நடைபெற உள்ளது.

## அபூர்வமான கண்ணாடி மீன்



உலகில் மிக அபூர்வமாக தென்படும் அரியவகை "கண்ணாடி மீன்" நியூசிலாந்தை சேர்ந்த ஒரு மீனவரின் வலையில் சிக்கியுள்ளது. நியூசிலாந்தின் வடபகுதியிலுள்ள கரிகரி வளைகுடா பகுதியில் அந்நாட்டை சேர்ந்த பிரேஸர் என்பவர் தனது மகன்களுடன் மீன் பிடித்து கொண்டிருந்தார்.

அப்போது கடல் நீரின் மேற்பரப்பில் கண்ணாடி போன்ற பளபளப்பான ஏதோ ஒரு அழகிய பொருள் நெளிந்து, நெளிந்து செல்வதைக் கண்டு வியப்படைந்த அவர், தனது கைவலையை லாவகமாக வீசி அந்த


அபூர்வ மீனைச்-சிறைபிடித்தார்.

அதனைச் சோதனையிட்ட கடல் உயிரியல் ஆய்வக அதிகாரிகள் பிடிபட்ட இந்த அரியவகை மீன், "ஸல்பா மகியோர்" என்ற இறால் வகை மீன் இனத்தை சேர்ந்தது என்றும், மிக அபூர்வமாகவே இவை கடலின் மேற்பரப்பில் தென்படும் என்றும் கூறியுள்ளனர்.

"முழுக்க முழுக்க கண்ணாடி போன்ற வடிவில் உள்ள இந்த மீனின் உடல் வழியாக ஊடுருவி, எதிர்ப்புறத்தில் உள்ள பொருட்களை துல்லியமாக பார்க்க முடிகிறது.

முதுகெலும்பு இல்லாத இந்த மீனின் இரைப்பை பகுதியில் உள்ள ஆரஞ்சு நிற அழுக்கு மட்டும் "பளிச்" என்று வெளியே தெரிகிறது" என்று இந்த மீனை பிடித்தவரின் மகன்களில் ஒருவனான "பின்" என்ற சிறுவன் ஆச்சரியத்துடன் கூறுகிறான்.

## அச்சிடப்பட்ட கண் செல்கள் - மருத்துவ உலகின் புதிய முயற்சி



பார்வைக் குறைபாட்டை சரி செய்யப் பயன்படும் முக்கிய கண் செல்களை அச்சிட்டு விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர்.

அச்சிட்டு உருவாக்கப்பட்ட செல்கள் தொடர்ந்து ஆரோக்கியமான முறையில் வளர்ச்சியடைவதாகவும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வுக்குழு தெரிவித்துள்ளது. தற்போதைய நிலையில் எலியின் ரெட்டினாவில் உள்ள இரண்டு முக்கிய செல்களை இன்க் ஜெட் பிரிண்டர் மூலம் அச்சிட்டு தயாரித்துள்ளதாக இக்குழு தெரிவித்துள்ளது.

மனிதர்களுக்கு பயன்படும் வகையிலான ஆய்வுகள் அடுத்தடுத்து மேற்கொள்ளப்படும் என்றும் விஞ்ஞானிகள் குழு குறிப்பிட்டுள்ளது. இந்த செல்களே கண்களில் இருந்து மூளைக்கு செய்திகளை அனுப்புபவை. தற்போதைய ஆய்வுகள் ஆரம்பக்கட்டத்திலேயே உள்ளதாக தெரிவித்துள்ள விஞ்ஞானிகள், வரும் காலத்தில் மேலும் சில ரெட்டினா செல்களை அச்சிட்டு தயாரிக்க உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

## ஐந்து வயது சிறுவனின் கின்னஸ் சாதனை



இந்தியாவின் பெங்களூரை சேர்ந்தவர் சதீஷ் - ஹேமா தம்பதியின் மகன் ககன்(5). இவன் பசவேஸ்வரா நகரிலுள்ள ஒரு தனியார் பாடசாலையில் எல்.கே.ஜி. படித்து வருகிறான்.

இந்த சிறுவன் ஸ்கேட்டிங் விளையாட்டில் மிகக்குறைந்த நேரத்தில் அதிக தூரம் பயணித்து கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்து உள்ளான்.


பெங்களூரில் நடைபெற்ற ஸ்கேட்டிங் போட்டியில் ககன் பங்கேற்றான். இதற்காக, 39 கார்கள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தன.

அதாவது சுமார் 69.2 மீட்டர் தூரத்துக்கு கார்கள் நின்றன. காரின் அடிப்பகுதிக்கும், தரைக்கும் இடையிலான உயரம் வெறும் 8 அங்குலம் தான் இருந்தது.

அவ்வளவு குறுகிய இடைவெளிக்குள் ககன் ஸ்கேட்டிங் உபகரணத்தை அணிந்து கொண்டு உடலை வில்லாக வளைத்து பயணித்து லாவகமாக வெளியே வந்தான். சுமார் 69.2 மீட்டர் தொலைவையும் வெறும் 28 நொடியில் கடந்து சாதனை படைத்தான்.

இதற்கு முன்பாக பெல்காமை சேர்ந்த ரோகன் என்ற 9 வயது சிறுவன் 24 கார்கள் அணிவகுத்து நிற்க அதற்கு அடியில் பயணித்து 47 நொடிகளில் கடந்ததே சாதனையாக இருந்தது. ககன் இந்த சாதனை மூலம் ரோகனை பின்னுக்குத் தள்ளிவிட்டு புதிய உலக சாதனை படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்து உள்ளான்.

# இசைத்துறையில் வீறுநடை போடும் நம்மவர்!



இளைய தலைமுறையினரிடையே கலைகள் மருவி மறையும் நிலை தோன்றிவருகின்றது. தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக இசை, பண்ணிசை, நடனம், நாடகம் போன்ற கலைகள் மறைந்து விடுமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

இந்நிலையில், இலங்கையிலுள்ள ஒரு சில தொலைக்காட்சி நிறுவனங்கள் கலைகளுக்கான களங்களை அமைத்து வருகின்றன. அந்த வகையில் வளர்ந்து வரும் ஓர் இசைக்கலைஞராக செல்வி பிர வீணா விக்னேஸ்வரன் திகழ்கிறாள்.

கொழும்பு வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பம் முதல் க.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்றார். பின்பு லண்டன் உயர்தர விஞ்ஞான பிரிவில் சித்தி எய்தி அதன்பின் தற்போது மாலபேயில் அமைந்துள்ள SLIT பல்கலைக்கழகத்தின் Business Management இறுதி ஆண்டில் கல்வியைத் தொடர்கின்றார். இவருக்கு மேற்குறித்த கல்வியில் இருமுறை புலமைப் பரிசில்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

பாடசாலைக் காலங்களில் இசைப் போட்டிகளில் பங்கு பற்றி பரிசில்களையும் பெற்றுள்ளார். அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் தனி இசை மேற்பிரிவில் முதலாம் இடத்தை தட்டிக்கொண்டவர். பாடசாலைக் காலத்தில் இசையை ஒரு பாடமாகக் கற்று க.பொ.த சாதாரண தரத்தில் திறமைச் சித்தியைப் பெற்றவர்.

## இசைப் பின்னணி

இவரது தந்தையார் விக்னேஸ்வரன், உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் கப்பற்றுறை பொறியியலாளராகக் கடமையாற்றி தற்போது தனியார் நிறுவனமான **T.R.R Power Engineering** இல் முகாமையாளராகக் கடமையாற்றுகின்றார்.

இவரது தாயார் ஜெகதேவி மீசாலையைச் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவில் சங்கீத டிப்ளோமாவில் விசேட சித்தி பெற்றவர். இசை ஆசிரியராக நாட்டின் பல பிரதேசங்களில் சேவையாற்றி தற்போது கொழும்பில் கடமை புரிகின்றார். இவரது சிறிய தாயாரும் ஒரு இசை ஆசிரியர். இவரது தாயாருடைய தந்தையாகிய காலஞ்சென்ற சி.கா.குலசேகரம் அவர்களும் இசைப்பிரியர் மட்டுமின்றி ஓரளவுக்கு கர்நாடக இசையை முறையாகக் கற்றவர். மேலும் ஜெகதேவி ஒரு பிரபல வானொலி, தொலைக்காட்சி மெல்லிசைப் பாடகியாவார். இவர் 34 வருட காலமாக வானொலி தொலைக்காட்சிக் கலைஞராக தொடர்ந்தும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார். அதுமட்டுமின்றி கவிஞர் வைரமுத்து இலங்கை வந்தபோது ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அவர் எழுதிக் கொடுத்த மூன்று மெல்லிசைப் பாடல்களுள் இரு பாடல்களைப் பாடியுள்ளார்.

பிரவீணாவுக்கு சகோதரர் ஒருவரும் உள்ளார். பிரவீணாவின் முதற்குரு இவரது தாயாரே. வட இலங்கை சங்கீத சபையில் மூன்றாம் தரம் வரை கல்வி கற்றுப் பின் தற்போது பிரபல சங்கீத வித்துவான் திரு ஆரூரன் அவர்களிடம் இசையை கற்றுவருகின்றார். நடனக் கலையை (பரதம்) திருமதி சிவானந்தி ஹரிதர்ஷனிடம் ஓரளவுக்கு முறையாகக் கற்றுள்ளார்.

## சாதனைகள்

- 2005ம் ஆண்டு நடைபெற்ற தமிழ்மொழித் தினப் போட்டியில் தனி இசை 3ம் பிரிவில் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றவர்.
- 2010ம் ஆண்டு நடைபெற்ற தமிழ்மொழித் தினப் போட்டியில் தனி இசை 5ம் பிரிவில் அகில இலங்கை ரீதியில முதலாம் இடத்தைப் பெற்றார்.
- 2003ம் ஆண்டு இந்து சமய அலுவல்கள் அமைச்சினால் நடாத்தபெற்ற இரண்டாம் உலக இந்து மாநாட்டில் தேசிய மட்ட பண்ணிசைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப்பெற்று வெள்ளிப் பதக்கம் வென்றவர்.

வசந்தம் TV யின் இசை நிகழ்ச்சியில் Sri Lankan Female Winner ஆக தெரிவு செய்யப்பட்டவர். பங்குனிமாதம் 3ம் திகதி நடைபெறவிருக்கும் Superstar Challenge மாபெரும் இறுதிப்போட்டியில் Sri Lankan Male Winner உடன் போட்டியிடவிருக்கின்றார்.

தொகுப்பு-ரிகேஆர்



பாரதி

வீடியோ & போட்டோ

உங்கள் இல்லங்களில் நடைபெறும்
நிகழ்வுகள் சிறப்படைய
நீங்கள் நாடவேண்டிய இடம்

பாரதி வீடியோ & போட்டோ
மீசாலை மேற்கு,
மீசாலை.
0778051173, 0771921184





அக்ஷயா
திருமண கார் சேவை

AKSHAYA
Wedding Car Service

தொடர்புகளுக்கு:- சாவகச்சேரி - 0778051173
யாழ்ப்பாணம் - 0774188597



TAMIL VIRTUAL ACADEMY
தமிழ் இணைய கல்விக் கழகம்
ஊடாக
Tamil University, Thanjavur
தஞ்சாவூர் - தமிழ்ப் பல்கலைக்கழகத்தில்
B.A. (தமிழ் சிறப்பு) பட்டம்

- A/L பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தி
- எந்தத்துறையைச் சார்ந்தவர்களாயினும் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம்) பட்டப்படிப்பைத் தொடரலாம்.
- தொழில் புரிபவர்களும் பதவி உயர்வுகளுக்காக இப் பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம்.
- வயதுக் கட்டுப்பாடு இல்லை.
- இப் பட்டம் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (University Grant Commi - ssion) அங்கீகாரம் பெற்றது.

குறிப்பு: 2014-ம் ஆண்டிற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தகுதியுடையோர் தங்கள் பதிவுகளை கீழ்க்காணும் முகவரிகளில் மேற்கொள்ளலாம்.

தென்மராட்சியில்,
பாரதி இன்ஸ்ரிரியூட்
மீசாலை மேற்கு,
மீசாலை.
0778051173,
0771921184



# SAN TEX
சன் ரெக்ஸ்



Lion S.Sutharsan
0773614683
0214908519

இல.08,
நவீன சந்தை
உட்புறம்,
சாவகச்சேரி

No.08,
New market
inside,
Chavakachcheri

# S.N.P TRAVELS
Van Service

Home to Home
Airport
உள்ளூர், வெளியூர் சேவைகள்




To contact:- S. Senkeeran
0777251262
0777210320
0773164588

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி

25/3 ஸ்ரீமாபோதி லேன்
தெஹிவளை

# NORTHERN
## INTERNATIONAL SCHOOL

- Checkpoint/IGCSE/AS/AL Exam by University of Cambridge International Examinations
- Sri Lankan O/L & A/L Syllabus
- Classes From Nursery to A/L
- Small group classes to give individual attention
- Well - Experienced and highly qualified staff
- Computer and Science Laboratory facilities
- Programmes to enhance leadership qualities
- Opportunities to develop the child's talents and skills from very young age
- International education which suits our culture



English KIDS

Improve
Your
Child's
Education through
English medium

For Registration and further information, contact-
Northern International School,
Church Lane, Kandy Road, Chavakachcheri, Sri Lanka
Tel/Fax:021 2270869 Hotline: 0727706810 E-mail: kkrsat9@gmail.com